Registered as a Newspaper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 20 வெள்ளிக்கிழமை (05.09.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 339

## கைதடியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிச்சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்தார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த் இந்திரன் லக்ஷன் (வயது-20) என்ற இளைஞன் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இதேவேளை படுகாயமடைந்த யோகராசா பிரசாந்த் (வயது-20) சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து நேற்று மாலை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவிற்கு மாற்றப்பட்டிருந்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தயார்

### பொன்சேகா தெரிவிப்பு

மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதனை ஏற்க தான் தயாரென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணையொன்றுக்காக கொழும்பு மேல் நீதிமனறத்துக்கு நேற்று வந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

தான் தலைமை வகித்த இராணுவம் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு அமையவே யுத்தத்தில் ஈடுபட்டதாகக் கூறிய பொன்சேகா, வெள்ளைக் கொடிகளை ஏந்தி வந்தவர்களை சுட்டுக் கொல்லுமாறு தான் உத்தரவுகளைப் பிறபபிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான விசாரணையோன்றுக்கு முகம் கொடுக்க நான் தயங்க மாட்டேனென்று கூறிய அவர், இலங்கை இராணுவம் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று நிரூபிக்க தான் தயாரென்றும் தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# எமது கடல் வளத்தை சூறையாட துணிந்து விட்டனர் இந்திய மீனவர்கள்



## வடக்கு முதல்வர் விசனம்

இழுவைப்படகுகளின் பாவனையால் இந்தியாவை சூழவுள்ள பகுதிகளின் கடல்வளம் அனைத்தும் இழுத்து அழிக்கப்பட்ட நிலையில் அங்கு வெறும் தரை மட்டுமே மிஞ்சியிருக்கின்றது. இந்த நிலையில்தான் அவர்கள் இங்கு வந்து எமது கடல் வளத்தையும் சூறையாடத் துணிந்துள்ளார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்றையதினம் மாதகலில் கடற்றொழிலாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தம்பி சந்திரகுமார் ஒரு முக்கியமான விடயம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார். அதாவது இந்திய - இலங்கை மீனவர்களிடையே தொடரும் இழுபறியில் எமது கடல் வளம் எந்த அளவுக்கு சூறையாடப்படுகின்றது என்பதுபற்றி. ஒருகாலத்தில் இந்தியாவைச்சுற்றியுள்ள பகுதிக

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் அபிவிருத்தியை விடுத்து அரசியல் செய்கிறது கூட்டமைப்பு

### அரசாங்கம் குற்றச்சாட்டு

வடக்கில் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்திப் பணிகளை புறக்கணித்து அரசியல் பயணம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் அமைச்சில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை வழங்கியுள்ளது. எனினும் அதில் 10 சதவீதத்தைக்கூட சபை செலவிடவில்லை. இறுதியில் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என எம்மீதே குற்றம் சுமத்துவார்கள்.

வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மந்த கதியில் நடப்பதால் அப்பாவி பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

ஒழுங்காக செயற்படாத மாகாண சபையைக் கலைத்துவிட ஆளுநருக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ அதிகாரம் இல்லை.

வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க வேண்டுமானால் அவர் அதறகான அனுமதியை இலங்கை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வீட்டிலிருந்தோரை கட்டிவைத்து பரந்தனில் துணிகரக்கொள்ளை

கிளிநொச்சி, பரந்தன், குமரபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை நுழைந்து வீட்டிலிருந்தவர்களை கட்டிவைத்துவிட்டு வீட்டிலிருந்த 6 இலட்சத்து 7,500 ரூபாய் பெறுமதியான நகை மற்றும் பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன் கதவை உடைத்து உள்நுழைந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரைக் கட்டிவைத்துவிட்டு, வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 15 பவுண் நகைகள் மற்றும் 7500 ரூபாய் பணம் ஆகியவற்றை

(19) ஆம் பக்கம் பார்க்க

## தலைமைத்துவ பயிற்சிநெறி மூன்று கட்டங்களாக நடைபெறும்


### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)


பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மூன்று கட்டங்களாக இடம்பெறவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதி இந்த தலைமைத்துவ பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. இதன்படி முதலாவது பயிற்சிநெறி எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரையும் இரண்டாவது கட்ட பயிற்சி நெறி ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரையும், மூன்றாவது கட்டப்பயிற்சி நெறி ஒக்ரோபர் 30 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. இராணுவம், கடற்படை, விமானப்படை, மற்றும் பொலிஸார் அநதப் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க



# வீதி மின்விளக்குகள் ஒளிராமையால் போக்குவரத்து நெருக்கடி



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட உள்ளக வீதிகளில் வீதி மின்விளக்குகள் ஒளிர்வதில்லை எனவும் இதனால் இவ்வீதிகளில் பயணத்தை மேற்கொள்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் மின்விளக்குகள் ஒளிர்கின்ற நிலையில் உள்ளக வீதிகளில் இவ்வாறு ஒளிராமையால் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் உள்ளக வீதிகளிலே இரவு வேளைகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் உள்ளக வீதிகளில் குறிப்பாக சந்திகளில் இரவு வேளைகளில் திருடர்களும் நடமாடுவதாகவும் இது மக்களின் பாதுகாப்புக்கு அபாயமாகக் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக பிரதேச சபை நடவடிக்கை எடுப்பதுடன் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வீதி மின்விளக்குகளை பொருத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(18)

# கடல் உணவு கூறுவிலையில் விற்பனை


# நான்கு புதிய மண்டபங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யூ.எஸ்.எயிட் நிறுவனம், யாழ் சமூக செயற்பாட்டு மையத்துடன் இணைந்து நிர்மாணித்த யாழிலுள்ள நான்கு மீன்பிடித் துறைமுகங்களுக்கான மீன் கூறுவிலை கூறும் மண்டபங்கள் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

மீள்குடியேறிய மக்களின் நலனுக்காக பணியாற்றுதல் என்னும் திட்டத்தில், 121 மில்லியன் ரூபாய் செயற்றிட்டங்களில் ஒன்றாக இந்த மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

காக்கைதீவு, பொன்னாலை, மாதகல் கடற்கரைப்பகுதி மற்றும் மாதகல் மேற்குப் பகுதிகளில் அமைக்கப்பட்ட மண்டபங்களே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டன.



மேற்படி மண்டபங்களை யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் அன்ரூ மன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தார்கள்.

மேற்படி திட்டம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ், யாழ்.மாவட்டத்தின் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளிலும், கிளிநொச்சியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், மேற்படி திட்டத்தில் கிணறுகள், மலசலகூடங்கள் அமைத்தல், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்தல், கூறுவிலை மண்டபங்கள் அமைத்தல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஐக்கிய அமெரிக்காவின் இலங்கைக்கான துணைத்தூதுவர் அன்றூமேன் வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன, சண்டிலிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் அன்ரன்ஜோன்சன் வலி.மேற்குப் பிரதேசசபையின் எதிர்கட்சித்தலைவர் பாலகிருஸ்ணன்(ஜீவன்) மற்றும் ஜசாக் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் மற்றும் அரச திணைக்களங்களின் அதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகள் கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# தவறிவிட்டது

கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த அருமைநாதன் அசோகத் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (832391417V) சாரதி அனுமதிப்பத்திரம் (B 1602207), காப்புறுதிப்பத்திரம் வாகன வரிப்பத்திரம், என்பன வல்லை வெளிக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட இடத்தில் 30.08.2014 அன்று தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் 0778332928 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (C/3505)

# நாற்றம் எடுக்கும் வழகான்கள்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மவுண்கார்மேல் வீதியில் அமைந்துள்ள வடிகான்கள் ஒழுங்காகத்துப்புரவு செய்யப்படுவதில்லை என்று அப்பகுதி குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வாரத்தில் இரண்டொரு தினங்கள் மட்டுமே துப்புரவு செய்யப்படுவதும் மேலால் தள்ளிச் செல்வதோடு விட்டுவிடுகிறார்கள். வடிகானில் தேங்கி அழுகிய பதார்த்தங்கள் மற்றும் மண்ணும் சேர்ந்து உறையும் சேறு அகற்றப்படாமல் இருந்து துர்நாற்றம் எழுகிறது.

இதன்காரணமாக நுளம்பு நோய்க்கிருமிகள் பெருகி டெங்கு மலேரியா மூளைக் காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றி வருவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (68)


# டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)


# யுத்த சாட்சிய பதிவுகளை மின்அஞ்சலில் அனுப்பலாம்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

ஐ.நா. விசாரணைக்கான சாட்சியங்களை யாருக்கூடாகவும் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை அனுப்ப விரும்பும் எவரும இணையத்தளம் ஊடாக தனிப்பட்ட ரீதியில் அவற்றை அனுப்ப முடியும். ஆனால் தபால் மூலம் கடிதத்தில் அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு வட மாகாண சபை உறுப்பினர் எம்கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐ.நா. விசாரணைக்கான சாட்சியம் அளிக்கும் விடயம் தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சிவாஜிலிங்கம், செய்தியாளர் ஒருவரினால் மக்களை சாட்சியங்களை பதிவு செய்வது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரிடம் வினவியபோது இது குறித்த தமக்கு விளக்க மில்லை என்று தெரிவித்து இது விடயத்தில் சுமந்திரன் எம்.பி. ஊடாகவே அனுப்ப வேண்டும் என சுமந்திரன் மீது குற்றம் சாட்டும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குறித்து கருத்துக் கேட்ட போதே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சாட்சியமளிப்பது மந்த கதியிலேயே இடம்பெறுகின்றது. இதனரல் யாரிடமும் வழங்காது நேரடியாகவே சாட்சியங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் எனவும் யார் குத்தினாலும் அரிசியானால் சரி எனவும், 10 பக்கங்கள் அடங்கிய சாட்சியத்தை நான் விரைவில் அனுப்புவேன். நாம் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (25,இ)

## தீ விபத்தில் இளைஞர் காயம் கல்வியங்காட்டில் விபரீதம்

கல்வியங்காட்டில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் இளைஞர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ரி.சிவதர்ஷன் (வயது-24) என்ற இளைஞரே எரிகாயங்களுக்கு ஆளாகியுள்ளார் ஆட்டோவுக்கு பெற்றோல் நிரப்பும் போது ஆட்டோ திடீரெனத் தீப்பற்றியதால் அவர் எரிகாயமடைந்தர். (இ)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2580 திகதி 03-09-2014

ஆங்கில எழுத்து: K

வெற்றி எண்கள் 61 63 65 69 போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ.17,571,550/- வெல்லப்படவில்லை

| இணைப்பு இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 229528 | 20/- | 4,590,560/- |
| 2 இல | 16348 | 100/- | 1,634,800/- |
| 3 இல | 346 | 1,000/- | 346,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9195 | 40/- | 367,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 685 | 1,000/- | 685,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,571,550/- | - |
| 1 இல + போனஸ் இல | 10980 | 100/- | 1,098,000/- |
| 2 இல + போனஸ் இல | 500 | 500/- | 250,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 394 | 200/- | 78,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 268008 | | 10,657,960/- |

இந்த சனிக்கிழமை கப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,197,625/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3504)





பிரபல தொழிற்சங்கத் தலைவரும் இடதுசாரி கட்சியின் ஸ்தாபகரும் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான காலஞ்சென்ற பிலீப்ஸ் பாலதம்புவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை இறுதி அஞ்சலி செலுத்தினார். அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சீ.எம்.யூ தலைமையகத்துக்குச் சென்ற ஜனாதிபதி அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் அவரின் குடும்பத்தாரிடம் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டார்.

# ஓய்வூதியர்களின் கொடுப்பனவை வங்கியில் வைப்பிலிட நடவடிக்கை

**யாழ். அரச அதிபர் தகவல்**

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியத் திணைக்களத்தின் 11/2014 சுற்று நிருபத்திற்கமைய செப்ரெம்பர் -2014 முதல் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் நேரடியாக ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஓய்வூதியர்களது செம்ரெம்பர் 2014 மாதாந்த ஓய்வூதியம் அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டமையை உறுதிப் படுத்திக் கொள்வதுடன் இது தொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப் படின் தங்களுக்கா்ன ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மேற்கொள் ளும் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் ஓய்வூதியர்களது ஓய்வூதிய நிலுவைகள் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அக்கொடுப்பனவுகள் யாவும் ஓய்வூதியத் திணைக்களத்தால் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடப்படும் என்பதையும் அறியத் தருவதுடன் ஓய்வூதியர்கள் தமது வங்கிக் கணக்கு நிலுவைகளை செவ்வை பார்த்து ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் வழங்கப்பட்ட ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகளின் விபரங்களை தங்களது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊனமுற்றோர் அரச கலை விழா செப்ரெம்பரில் நடாத்த ஏற்பாடு

கொழும்பிலுள்ள அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் ஊனமுற்றோர் தொடர்பான அரச கலை விழாவை இவ் வருடம் செப்ரெம்பர் மாதத்தில் நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளது..

இது தொடர்பான சுற்றுநிருபம் நாடு முழுவதிலுள்ள மாவட்ட செயலாளர்கள், பிரதேசசெயலர்களுக்கு. அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஊனமுற்றோர் தொடர்பாக நடாத்தப்படும் முதலாவது அரச கலைவிழாவாக இது அமைய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போட்டியாளர்கள் முதலாவதாக ஊனம் ஏற்பட்ட காரணம் பிறப்பு, நோய், போர், விபத்து என்ற அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டாவதாக வயது அடிப்படையில் 18 வயதுக்கு குறைந்தோர், கூடியோர் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மூன்றாவதாக ஊனத்தின் அடிப்படையில் கண் பார்வை ஊனமானவர்கள், பேச்சு செவிப்புலன் அடிப்படையில் ஊனமானவர்கள்,உடல் அசைவில் ஊனமானவர்கள், மந்த புத்தி மனநிலை பாதிப்பு அடிப்படையில் ஊனமானவர்கள் என 3 வகைகளாக வகைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் விஜித் கணுகல தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் நடனப் போட்டி சுதேச நடனம்,இந்திய நடனம், புத்தாக்க நடனம்,நாட்டார் நடனம் என்ற வகைகளாக நடைபெற உள்ளன. இசைக்கருவி இசைத்தல் போட்டிகளில் வயலின், சித்தார், புல்லாங்குழல் ஆகியவை இசைத்தலும், பாட்டுப் போட்டியில் மெல்லிசைப் பாடல்,நாட்டார் பாடல், கர்நாடக சங்கீதப் பாடல் என்பவையும், பறை சாற்றும் போட்டியில் சுதேசிய பறை சாற்றுதல், இந்திய பறை சாற்றுதல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

ஓவிய ஆக்கப் போட்டி, குறு நடனப் போட்டி, நாட்டிய நடனப் போட்டி,அபிநய நடனப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உதவியாளர்களிடம் பெற முடியுமென கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித் கணுகல தெரிவித்தார். (90)

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



செட்டிகுளம் துட்டுவாகையில் தந்தையை இழந்த 15 மாணவர்களுக்கும், மிகவும் வறிய 28 மாணவர்களுக்குமாக மொத்தம் 43 மாணவர்களுக்கு துட்டுவாகை கிராம அபிவிருத்தி சங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக "இளந்தளிர் கல்வி" அறக்கட்டளை வழங்கிய ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை அண்மையில் துட்டுவாகை பொது நோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் சந்திரகுமார் (கண்ணன் ), துட்டுவாகை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஜோன், துட்டுவாகை,இளந்தளிர் விளையாட்டுக்கழக செயலாளர் பெனட்,.உறுப்பினர் வசந்தன், துட்டுவாகை மீள் எழுச்சித்திட்ட தலைவி சந்திரிக்கா ,பொருளாளர் யோகேஸ்வரி, துட்டுவாகை மகளிர் அமைப்பின் குறிஞ்சிமலர் உட்பட பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டனர். (70)

# வடமாகாணத்தில் மன்னாருக்கு என்ன இடமிருக்கு?




வடமாகாணத்தில் மன்னாருக்கு என்ன இடமிருக்கு? என்டொரு கேள்வியைப் போட்டார் மன்னார் வாசி ஒருத்தர்.

போன கிழமை மன்னாருக்கு நான் போனபோதே இந்தப் பொல்லாத கேள்வி வந்தது?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நான் திணறிப்போனன்.

சத்தியமாக உங்களில ஆருக்காவது இந்தக் கேள்விக்கான பதில் தெரிஞ்சால், அதை ஒருக்கால் தயவு செய்து எனக்கும் சொல்லுங்கோ!

'வடமாகாணத்தில் மன்னாருக்கு என்ன இடமிருக்கு?'

'மன்னாரைப் பற்றி எந்தப் பேப்பர்காரனாவது எழுதிறானா?'

'எந்த அரசியல்வாதிகளாவது மன்னாருக்கு வந்து எதையாவது செய்ய வேணும் என்டு யோசிக்கிறாங்களா?'

'மன்னார் இப்ப எப்பிடி இருக்கெண்டு ஆருக்காவது தெரியுமா? அல்லது அதைப்பற்றி அறியிறதில ஆருக்கேனும் அக்கறையிருக்கா?'

'அமைச்சர் றிஷாத்துக்கும் ஆயருக்கும் இடைக்கிடை நடக்கிற அதிகாரப் போட்டியில ஏதாவது செய்திகள் வந்தால் சரி. மற்றும்படி இங்கே கழுதை தேய்கிறதே தவிர, உருப்படியான கதை ஏதும் நடக்கிறதாக இல்லை' என்றெல்லாம் பொரிந்து தள்ளினார் நண்பர்.

இந்த நண்பருடைய ஆதங்கம் மிகச் சரியெண்டே எனக்கும் படுகிது.

மன்னாரைப் பற்றி ஆரும் கவலைப்படுகிற மாதிரி இல்லை.

தேர்தல் காலங்களில் தமிழ்ப் பற்றும் பாசமும் பொங்க, அரசியல்வாதிகள் மன்னாரில் கானல் தெருக்களில் கால்நடையாக நடந்து, மன்னாரை அளப்பார்கள்.

மன்னாருக்கு பொன்னான எதிர்காலம் வரப்போகிறது. அதைத் தங்கத்தட்டில் கொண்டு வந்து தரப்போகிறோம் என்டெல்லாம் புளுகித்தள்ளுவார்கள்.

அந்த நாட்களில் வண்ணக்கொடிகள் வானில் பறக்கும்.

மன்னாரில் முழங்கும் இந்தத் தேர்தல் தமிழோசையில் மயங்கிக் கிறங்கிப் போகிற சனங்கள் அப்பிடியே போய் வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியைக் கீறிப்போட்டு வந்து விடுவார்கள்.

பிறகு?

மன்னார்ப்பக்கம் எந்தப் பயலும் திரும்பியே பார்க்க மாட்டார்கள்.

ஆயர் இராயப்பு யோசேப்பு மட்டும் இருந்தால் போல ஒரு தடவை இருமுவார். அல்லது தும்முவார்.

மற்றும்படி மன்னாரில் எதுவுமே நடப்பதில்லை.

ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட ஒரு பகுதியாகவே மன்னார் புறக்கணிக்கப்பட்டிருக்கும்.

இது ஏன் என்டதே மன்னார் வாசிகளின் கவலையும் கேள்விகளும்.

ஆனால், இந்தக் கவலையை எந்தத் தமிழர்களும் கவனத்தில் எடுப்பதில்லை.

தமிழ்கூறும் நல்லுலகம் இதைப்பற்றி என்றும் சிந்திப்பதும் இல்லை.

நரிகளைப் பரிகளாக்கிய ஈசனின் திருவிளையாடல் பற்றி ஞானக்கூத்தன்ர ஒரு கவிதையில சொல்லுற மாதிரிதான்... பரிகள் ஆக்கப்படாத நரிகளை யாரும் கவனிப்பதில்லை. 'விடுபட்ட பேரை கவனிக்க மாட்டோம் போய்வா' தான்!

இந்த ஒதுக்கல் – ஓரவஞ்சனை தனியே மன்னாருக்கு மட்டும் என்றில்லை.

மன்னாரைப்போல இன்னும் சில பிரதேசங்கள் இப்பிடித்தான் காலாதிகாலமாக ஒதுக்கப்பட்டும் ஓரங்கட்டப்பட்டும் வருகின்றன.

இதற்கெல்லாம் பதில் எவரிடமும் கிடையாது.

இதைப்பற்றி எவரும் பொதுவெளியில் உரையாடுவதோ கவனப்படுத்துவதோ இல்லை.

ஆனால். தமிழ்த்தேசிய அரசியலில் இந்தக் குறைபாடுகள் அத்தனையும் மறைக்கப்பட்டு விடும்.

இதைப்பற்றி ஆராவது பேசினால். அது பிரதேச வாதம் என்டு சொல்லி அப்படியே தமிழ்த்துரோகச் சிந்தனையைப் பரப்பாதீர்கள் என்டு ஆணி அடித்து விடுவார்கள்.

மன்னாருக்கு நீங்கள் வந்து பார்த்தால் தெரியும், இங்கே மீனவர்களின் பிரச்சினைகளில் இருந்து போதை வஸ்துப் பிரச்சினைகள் வரையில் ஏராளமான சிக்கல்கள் இடியப்பச்சிக்கல்களாக உருவாகிக் கொண்டேயிருக்கின்றன என்டதை அறியலாம்.

இதுக்கெல்லாம் வடக்கு மாகாணசபையோ, தமிழ்த்தேசிய அரசியலோ தீர்வைத் தரப்போவதில்லை.

இந்த நிலையில் அரச தரப்பும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதாக இல்லை.

எனவே மன்னார் அபாயத்தின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

நாம் துன்பப்படுவது நம் செயல்களின் காரணமாகத்தான். அதற்குக் கடவுள் பொறுப்பல்ல.

- விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஒரு வெற்றிக் கதையின் முடிவு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் மற்றுமொரு ஏமாற்று நாடகமாகத்தான் தமிழ் மக்களுக்கு வீரபாண்டிய கட்டபொம்மன் வசனங்களோடு நடித்துக் காட்டப்படும் என்பதை அவர்களது பயணத்திற்கு முன்னரே நாம் குறிப்பிட்டிருந்தோம்.

இந்தியா மட்டுமல்ல சர்வதேசமே ஐந்து வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கும் "உங்கள் அரசாங்கத்துடனும் அனைத்துக் கட்சிகளுடனும் பேசி ஒரு தீர்வைக் காணுங்கள்" என்பதைத்தான் இப்போதும் மோடி அரசு இவர்களிடம் சொல்லி அனுப்பும்.

இவர்களும் உலக்கையை விழுங்கியவர்கள் போலத் திரும்பி வந்து, பழைய வீரவசனங்களையே திரும்பவும் ஒருமுறை சொல்லி "இந்தியப் பயணம் வெற்றி" என்றுவிட்டுப் பம்முவார்கள் எனவும் எழுதியிருந்தோம்.

அதுபோலவே, இந்தியாவிலிருந்து வந்த அவர்கள், நமது பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவுடன் பேசி என்ன வழியைக் கண்டடைந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் ஏதேதோ சொன்னார்கள். "மோடி உன்னிப்பாக கேட்டார்" "பேச்சு திருப்தியாக இருந்தது" "நல்லதொரு ஆரம்பம்" "இந்தியாவின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடரும்" "பயணம் வெற்றி".... என்றெல்லாம் 'புங்கடி புளியடி' கணக்கில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மக்களைப் புத்திசாலித்தனமாக ஏமாற்றுவதாக நினைத்துக் கொண்டு பாவம் மாவையார், "இந்தியாவிடம் பல விஷயங்களை பேசியிருக்கிறோம். இரகசியமான சில முடிவுகளை வெளியே சொல்லிவிட முடியாது" என்று வேறு சீரியஸாகச் சொன்னார்!

என்ன பேசப்பட்டது என்பது பற்றி இந்தியப் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை வேறுமாதிரியாகச் சொல்கிறதே என்று தமிழ் ஊடகங்கள் எவையும் தலைவர்களிடம் கேட்கவில்லை. அவ்வளவுக்கு [illegible]க கட்சி விசுவாசம் அவைகளிற்கு!

ஆனால், கூட்டமைப்பின் தலைவர்கள் வேறுவழியின்றி, வேற்றுமொழி ஊடகங்களுக்கு மெல்ல மெல்ல உண்மையைக் கக்கிவருகிறார்கள்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சில, பல ஆலோசனைகளை இந்தியப் பிரதமர் முன்வைத்தார் என்றும், புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான செய்தி ஒன்றையும் இந்தியப் பிரதமர் தங்களிடம் குறிப்பிட்டார் என்றும் இப்போது தெரிவிக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

"நீங்கள் (இரா.சம்பந்தன்) ஒரு நிதானமான போக்கைக் கடைப்பிடிக்கின்றீர்கள். அதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஒரு காரசாரமான – வன்முறையை ஆதரிக்கக்கூடிய – ஒரு கருத்து வெளிவராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமை. அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.' – என்று இந்தியப் பிரதமர் சொன்னாராம்.

"சர்வதேச சமூகத்தை பொறுத்தவரை அது இந்தியாவாக இருக்கலாம், அமெரிக்காவாக இருக்கலாம், வேறு எந்த ஒரு நாடாகவும் இருக்கலாம். இலங்கையில் ஒரு பிரிவினை ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஒருமித்த இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் சமத்துவமாக வாழக்கூடிய ஒரு நிலைமை ஏற்படவேண்டும் என்பதுதான் அவர்களுடைய கருத்து" என்றும் மெல்ல சாக்குக்குள்ளிருந்து பூனையை வெளியே எடுத்து விடுகிறார் சம்பந்தன்.

மோடியை சந்தித்துத் திரும்பிய த.தே.கூ. குழுவில் ஒருவரான எம்.ஏ.சுமந்திரன் 'டெய்லி மிரர்' பத்திரிகையின் நேர்காணலில் இதை இன்னும் தெளிவாக சொல்கிறார். "இந்தியாவின் நிலைப்பாடானது, ரி.என்.ஏ இலங்கை அரசாங்கத்துடன் பேசி ஒரு தீர்வை காணவேண்டும் என்பதுதான். இது ஒரு புதிய நிலைப்பாடு அல்ல. இதைத்தான் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கும் 2010ல் எங்களிடம் தெரிவித்தார்".

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் "இந்தியப் பயணம் வெற்றி" கதைமுடிவு இதுதான்!

- ஆசிரியர்

# விமல்வீரவன்சவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு எதிராக நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தம்மை இழிவுபடுத்தியதாகத் தெரிவித்து கடுவெல நகர சபையின் தலைவர் ஸ்ரீ எச். புத்ததாச [illegible] தாக்கல் செய்துள்[illegible]

2014ஆம் ஆண்டில் விமலின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியினால் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையொன்றில் தம்மை இழிவுபடுத்தி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஞ்சாயுதம் என்ற பெயரில் இந்தப் பத்திரிகை பிரசுரமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காக அமைச்சர் விமல் வீரவன்ச ஐந்து கோடி ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென புத்ததாச கோரியுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இன்று இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச, கட்சியின் செயலாளர் பிரியன்ஜன் விதாரனகே ஆகியோருக்கு எதிராக இவ்வாறு நட்டஈடு கோரி நகர சபைத் தலைவர் புத்ததாச வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

# சிறாட்டிகுளம் கிராமத்துக்கான பேருந்துசேவை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சிறாட்டிகுளம் கிராமத்துக்கான போக்குவரத்து சேவை, ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள சிறாட்டிகுளம் கிராமத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 180 இற்கும் மேற்பட்டவர்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதி மக்கள், தமக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு 7 கிலோமீற்றர் தூரம் வரையில் செல்லவேண்டிய தேவை இருப்பதுடன், அதற்கு எவ்வித போக்குவரத்து வசதிகளும தங்களுக்கு இல்லையெனவும் தெரிவித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம். இதன்போது, வவுனியாவிலிருந்து பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம் ஊடாக மூன்றுமுறிப்பு வரை தினமும் சேவையில் ஈடுபடும் அரச பேருந்தை சிறாட்டிக்குளம் வரையில் சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்வதாக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் முனைஸ் பாருக் ஒப்புதலளித்தார்.

அதன்படி, மேற்படி பகுதிக்கான பேருந்து சேவைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கால்நடைப் பண்ணையாளர்களை ஊக்குவிக்க இலகுகடன் திட்டம்

கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டு பகுதியிலுள்ள கால்நடைப் பண்ணையாளர்களை மேம்படுத்தும் பொருட்டு, தெரிவு செய்யப்பட்ட 84 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம இலகுகடன்கள் வழங்கப்படவுள்ளதாக, கிளிநொச்சி கால்நடை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த இலகு கடன் மூலம் கால்நடைகள், கால்நடைகளுக்குத் தேவையான கொட்டில்கள் அமைத்தல் மற்றும் தீவனம் ஆகியவற்றையும் கொள்வனவு செய்ய முடியும்.

கால்நடைகள் கொள்வனவு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் கால்நடை அபிவிருத்திச் சங்கத்தினூடாக மேற்கொள்ளப்படும்.

பெற்றுக்கொள்ளும் கடன்களை இலகுமுறையில் திருப்பிச் செலுத்துவதற்கான வசதிகளும் பயனாளிகளுக்கு ஏற்படுத்தித் தரப்படும் என சங்கம் தெரிவித்தது.

அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட 84 பயனாளிகளுக்கும் கால்நடைகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரியவருகிறது.

# 33 ஆயிரத்து 640 ஏக்கர் நிலப்பரப்பில் கிளிநொச்சியில் காலபோக நெற்செய்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கைக்காக, 8 குளங்களின் கீழ், 33 ஆயிரத்து 640 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக, கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் 59 ஆயிரம் ஏக்கரில் இருந்து 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம்முறை குளங்களின் கீழ் 33 ஆயிரத்து 640 ஏக்கர் நிலப்பரப்பிலும், மிகுதி மானாவாரியாகவும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்தவகையில், கல்மடு குளத்தின் கீழ் 3,450 ஏக்கரும், பிரமந்தனாறு குளத்தின் கீழ் 602 ஏக்கரும், இரணைமடுக் குளத்தின் கீழ் 21,985 ஏக்கரும், கனகாம்பிகைக் குளத்தின் கீழ் 250 ஏக்கரும், புதுமுறிப்பு குளத்தின் கீழ் 985 ஏக்கரும், அக்கராயன் குளத்தின் கீழ் 3,417 ஏக்கரும், வன்னேரிக்குளத்தின் கீழ் 346 ஏக்கரும், கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 1,505 ஏக்கரும், குடமுறிட்டி குளத்தின் கீழ் 1,100 ஏக்கரும் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, நிலத்தைப் பண்படுத்தும் நடவடிக்கையில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

குளங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைகளின் அறுவடை முழுமையாகக் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படும்.

இருந்தும் மானாவாரி எனப்படும் வானம் பார்த்துச் செய்யப்படும் நெற்செய்கையின் அறுவடை மழையை நம்பியே உள்ளது. சரியான காலத்தில் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறாவிட்டால் அந்த நெற்செய்கை பாதிப்படையும் அபாயமும் காணப்படுவதாக திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சிறைச்சாலை மத்திய நிலையத்துக்கு மாத்தறையில் இன்று அடிக்கல்

(மாத்தறை)


மாத்தறையில் சிறைச்சாலை பயிற்சி மத்திய நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை 8.00 மணிக்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெறவுள்ளது.

மாத்தறை, கொடுவில புதிய நகர அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் இப்பயிற்சி மத்தியநிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் சந்திரசிறி முதுகுமாரன, கமத்தொழில் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன, தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக் குழுவின் தலைவர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தவறாக வழிநடாத்தும் தமிழ்த்தேசியத்தை மக்கள் சரியாக புரிந்து கொள்ளவேண்டும்

## யாழ்.மாவட்ட ஒழுங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் இன்று எதற்கெடுத்தாலும் போட்டிபோட்டுப் பெற்றுக் கொள்ளும் வாழ்வியல் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டனர். தவறான வழியில் தமிழ்த் தேசியத்தை மக்களிடம் திணித்து இளைஞர்களது வாழ்வியலையும் கலாசாரத்தையும் ஒட்டு மொத்தமாக சீரழிப்பதுதான் இவற்றிற்கு காரணம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

30 வருடகால இடப்பெயர்வின் பின் மீளக்குடியமர்ந்து மிக வறுமையில் வாழும் வசாவிளான கோணாவளைப்பகுதி மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக அப்பகுதி முத்தமிழ் கலையரசி சனசமூக நிலையத்தினரால் மக்கள் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மக்களுடனான கலந்துரையாடலின் போது உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேலும் கூறியதாவது.

வறுமையில் வாழும் மக்களை வளப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை அற்ற சபையாக வடமாகாண சபை செயற்பட்டு வருகிறது.

இருந்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மத்திய அரசுடன் கொண்டுள்ள இணக்க அரசியலின் மூலம் யாழ்ப்பாணத்தில் இத்தனை அபிவிருத்திகளையும் செய்ய முடிந்துள்ளது.

எனவே தமிழர் அரசியலில் மாற்றத்தை மக்களாகிய நீங்கள் கொண்டுவாருங்கள். நாங்கள் உங்களது வாழ்வியலில் மாற்றத்தை நிச்சயமாக்க கொண்டு வந்து தருகின்றோம் என்றார்.

மேலும் தற்போது கூட்டமைப்பினர் உலகம் எங்கும் தமிழர் பிரச்சினையை தீர்த்துத் தாருங்கள் என்று ஓடித்திரிகின்றார்கள்.

ஆனல் தமிழர்களுக்கு என்ன தீர்வை பெற்றுக் கொடுக்கப் போகின்றார்கள் என்று அவர்கள் இன்று வரை வெளிப்படையாக மக்களுக்கு கூறியது கிடையாது.

40 வருடங்களுக்கு மேற்பட்ட சுயநலம் கலந்த அரசியல் வரலாற்றை மாற்றியமைக்க மக்களாகிய நீங்கள் முன்வரவேண்டும். வருங்காலத்தில் அரசியல் ரீதியான ஒரு மாற்றத்தை கொண்டுவருவதனூடாகத்தான் தமிழர்களுக்கான அனைத்து அதிகாரங்களையும் வென்றெடுக்க முடியும். இந்த மாற்றத்தின் மூலம் தமிழர்களது அரசியல் தலைமையை உங்களுக்காக உழைக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கொடுங்கள். நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் பெற்றுத்தருவார் என்றார்.

# அங்குரார்ப்பண நிகழ்வு



(வவுனியா)

'வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்' என்ற தொனிப்பொருளிலான சுயதொழில் மேம்பாடு மற்றும் கிராம வளர்ச்சிக்கான திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கிய 100 கிராம மக்களின் பொருளாதார மற்றும் கிராம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான உனைஸ் பாரூக், முத்தலிபாபா உனைஸ் பாரூக் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கிராம ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி விபரங்கள் அடங்கிய பத்திரங்கள் கிராமிய குழுக்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்து வைக்கப்படன. (70)

# சமிக்ஞை ஒலிமூலம் குப்பை அகற்ற நடவடிக்கை

சாவகச்சேரி நகர் பகுதியில் சமிக்ஞை ஒலி மூலமான குப்பையகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நகர சபை உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான ஞா. கிஷோர தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தையும் அழகையும் பேணும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுவரை காலமும் வீடுகளில், கடைகளில் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவுகள் வீதி ஓரங்களில் போடப்பட்டு வந்தன.

அவற்றை அகற்றுமுன் இடைப்பட்ட நேரத்தில் அவை கட்டாக்காலி கால்நடைகளால் இழுத்து வீதிகளில் வீசப்பட்டு வந்தன இதன் மூலம் நகர் பகுதிகள் துர்நாற்றம் வீசியதுடன் அழகும் இல்லாமற போயுள்ளது.

இதனை தடுக்கும் நோக்கில் முதற்கட்டமாக சமிக்ஞை ஒலி மூலமான குப்பை அகற்றும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளோம் என்றார்.

இதன் போது குப்பைக் கழிவுகளை முற்கூட்டியே வீதிகளில் போடாது அவரவர் வீடுகளில் சேகரித்து வைத்தால் குறித்த ஒலியுடன் குப்பையகற்றும் இயந்திரம் வரும் போது அவற்றினுள கழிவுகளைப் போடுவதன் மூலம் நகர் மாசடைவதைத் தடுக்க முடியும் என அவர்மேலும் தெரிவித்தார். (48)

# முதியோர் இல்லத்தில் மூத்தபத்திரிகையாளர் கோபு

மூத்த பத்திரிகையாளர் எஸ். எம்.கோபாலரத்தினம் (கோபு) சுழிபுரம் சிவபூமி வயோதிபர் பராமரிப்பு விடுதியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

'வீரகேசரி', ஈழநாடு, ஈழமுரசு, தினக்கதிர் பத்திரிகைகளில் ஆசிரியபீடம், பிரதம ஆசிரியர் பதவிகளை வகித்து இன்று பல பத்திரிகைக்களில் ஆசிரியர் மற்றும் செய்தியாளர்களாக இருக்கும் பலரை உருவாக்கியவர் கோபாலரத்தினம்.

பலரை பத்திரிகைத்துறைக்காக உருவாக்கியதுடன் அவர்களை நெறிப்படுத்திய பெருமைக்குரியவர். இவர் முதுமை அடைந்துள்ளதால் இவரைப் பராம ரிப்பதற்கென வண்ணைக் கலைவாணர் நாடகமன்ற ஸ்தாபகர் 'கலாபூஷணம்' இராசையா பீதாம்பரம் (இரா - பற்குணம்) 'சிவபூமி' இல்லத்தில் சேர்ப்பித்து இருப்பது குறிப்படத்தக்கது. (68)

# வருடாந்த அலங்கார உற்சவம்

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி தெற்கு, கலை ஒளி அண்ணமார் மகேஸ்வரர் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன. 10 தினங்கள் நடைபெறும் இவ் அலங்கார உற்சவம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.தயாபரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

இத் திருவிழாக்களின் படி நேற்றுமுன்தினம் புதன்கிழமை வேட்டைத்திருவிழாவும், நேற்று வியாழக்கிழமை சப்பரத்திருவிழாவும் இடம்பெற்றதுடன் இன்று வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பகல் பிராயச்சித்த அபிஷேகம், மாலை வைரவர் சாந்தியும் இடம்பெறும்.

அடியார்கள் உற்சவகாலங்களில் கோவிலுக்குத் தேவையான பால், இளநீர், தயிர், பழம் போன்றவற்றையும் பூசைக்குரிய பூ, மாலை ஆகியவற்றையும் ஆலயத்தில் கொடுத்துதவி எம்பெருமானின் அனுக்கிரகத்தை பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (85)

# ஆட்டுக்குட்டி திருட்டு

கல்வியங்காடு, புலவனார் வீதியில் வீட்டின் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்த கடா ஆட்டுக்குட்டியொன்றைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

தாய் ஆடும், மறிக்குட்டி, கடாக்குட்டி என இரண்டு குட்டிகளும் வீட்டின் பின்புறத்தில் கட்டப்பட்டு இருந்தன. இரவு 9 மணியளவில் ஆடுகள் மூன்றுக்கும் தீனி போட்டுவிட்டு வந்ததாகவும் பின்னர் தற்செயலாக பார்த்தபோது கடாக்குட்டியைக் காணவில்லை எனவும் ஆட்டுக்குட்டி உரிமையாளர் தெரிவித்தார். இக் குட்டி நான்கு மாத வயதைக் கொண்டதாகும். வீட்டுக்காரர்களும், அயல் வீட்டாரும் விழிப்பாக இருந்த நேரத்திலேயே ஆட்டுக்குட்டி களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (137)





இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 148 ஆவது தினம் நெல்லியடியில் நேற்றுமுன்தினம் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி கங்கார தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படுவதையும் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறுவதையும் காணலாம். (18)

# தமிழ் மக்கள் தவறான பாதையை தெரிவு செய்யமாட்டார்கள்

## இராணுவப் பேச்சாளர் நம்பிக்கை



தமிழ் மக்கள் தவறான பாதையைத் தெரிவு செய்யமாட்டார்கள் என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புலிகளின் செயற்பாடுகள் இலங்கைக்குள் இல்லை. யுத்த காலகட்டத்தில் இலங்கை பல அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்த போதிலும் தற்போது தேசிய அளவில் இலங்கையில் பயங்கரவாத செயற்பாடுகள் எவையும் இல்லை. எனினும் புலிகள் அழிக்கப்பட்டிருப்பது இலங்கையில் மட்டுமே ஆகும். சர்வதேச அளவில் இவர்களின் செயற்பாடுகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன.

யுத்த காலகட்டத்தில் சர்வதேசத்தில் இருந்து இயங்கிய புலிகளின் அமைப்புகளும் அதன்பின்னர் புலம்பெயர்ந்த தமிழர்களும் இன்று மேற்கத்தேய மற்றும் மத்திய நாடுகளில் இருந்து இலங்கைக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் செயற்பாடுகள் இலங்கைக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

எனினும் இலங்கையை சர்வதேச பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்க நாம் நாட்டில் தேசிய பாதுகாப்பினைப் பலப்படுத்தியுள்ளோம். அத்தோடு சர்வதேச பாதுகாப்பு செயற்பாடுகள் மட்டில் நாம் நல்ல முறையில் செயற்படுகின்றோம்.

ஆயினும், புலம்பெயர் அமைப்புகள் மக்களுடன் தொடர்புகளை வைத்து மீண்டும் நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தும் முயற்சிகளை கையாள்கின்றன. எது எவ்வாறு இருப்பினும் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பட்ட இன்னல்களை இன்னமும் மறக்கவில்லை. எனவே, அவர்கள் இப்போது பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் செயற்படுகின்றனர்.

இனியொருபோதும் அவர்கள் பயங்கரவாதத்தினை ஆதரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. மக்கள் மீதுள்ள நம்பிக்கையிலேயே நாம் தைரியமாகச் செயற்படுகின்றோம் என்றார்.

## நிறைவுக்கு வந்தது பகிஷ்கரிப்பு போராட்டம்

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை சேவையாளர் ஆரம்பித்த அடையாள பணிப் பகிஷகரிப்பு போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது.

இந்த பணி நிறுத்த போராட்டம் காரணமாக மத்திய அஞ்சல் பரிமாற்று நிலையத்தில் 3 ஆயிரம் பொதிகளும் சுமார் 7 இலட்சம் வரையிலான கடிதங்களும் தேங்கி கிடப்பதாக அஞ்சல் தொழிற்சங்க சம்மேளன ஒன்றியத்தின் இணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

அஞ்சல் சேவையாளர்களை இணைத்துக் கொள்வது மற்றும் பதவி உயர்வு தொடர்பில் புதிய முறைமையை அறிமுக செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

இதற்கிடையில் மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் குவிந்து கிடக்கும் அஞ்சல்களையும் பொதிகளையும் இரண்டு தினங்களுக்குள் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அஞ்சல் தொழிற்சங்க சம்மேளன ஒன்றியத்தின் இணைப்பாளர் சிந்திக்க பண்டார குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கி முனையில் காதல் சந்தேகநபர் கைது

துப்பாக்கியைக் காட்டி யுவதி ஒருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முற்பட்ட ஒருவர் கோட்டே பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுவதி ஒருவர் கோட்டைப் பகுதியால் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் மற்றுமொருவருடன் வருகை தந்த சந்தேகநபர் துப்பாக்கியைக் காட்டி தன்னைக் காதலிக்குமாறு யுவதியைக் கோரியுள்ளார்.

யுவதியின் பயணப் பொதி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை சந்தேகநபர் அபகரித்துச் சென்றதாகவும், பின்னர் அவற்றை ஒப்படைத்துவிட்டு தனது யோசனைக்கு யுவதியை இணங்கச் செய்வதற்கு முயற்சித்துள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

இதனையடுத்து மிரிஹான விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன் மோட்டார் சைக்கிளில் வந்ததாக கூறப்படும் நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவிக்கின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவில் நிர்வாக சமூக உறவே நீண்ட நல்லிணக்கத்திற்கு அவசியம்

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

நீண்டகால நல்லிணக்கத்துக்குச் சிவில் நிர்வாகத்துக்கும் உள்ளூர் சமூகத்துக்கும் இடையிலான நம்பிக்கை அவசியமானது என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு விஜயம் செய்து திரும்பிய பின்னர் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீன் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை அறிக்கை ஒன்றின் மூலம் அவர் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு சென்ற ரங்கீன், பிரித்தானிய நிதியுதவியின் கீழ் செயற்படும் சமூக பொலிஸ் நிகழ்ச்சித்திட்டம் குறித்து கலந்துரையாடினார்.



பொலிஸ் மற்றும் சமூகத்துக்கு இடையிலான உறவைப் புதுப்பிக்கவே இந்த நிகழ்ச்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தாம் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு உள்ளூர் சமூகத்தினருக்கும் பொலிஸாருக்கும் அழைப்பு விடுத்ததாக ரங்கீன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின்கீழ் சமூகத்துக்கு பொலிஸ் மீது நம்பிக்கை ஏற்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்று ரங்கீன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பின் பிரித்தானிய உயர்ஸ்தானிகரக நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் சமூக பொலிஸ் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 142 பொலிஸ் நிலையங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தமிழ் தெரிந்த பொலிஸாரை அதிகரிப்பதற்கும் சிறுபான்மை சமூகத்தினரின் நம்பிக்கையை வெல்வதற்குமான அம்சங்கள் மேற்கொள்ளப்படுவதாக ரங்கன் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவ போசாக்குத் திட்டம்



மாணவ மாணவிகளின் போஷாக்கை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட "சிசு போஷ" (மாணவ போஷாக்கு திட்டம்) நேற்றுமுன்தினம் மு.ப 10.00 மணிக்கு ஜனாதிபதி பாரியார்- முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ தலைமையில் பொலன்னறுவ ரோயல் கல்லூரியில் ஆரம்பமானது.

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் முதல் பெண்மணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கமத்தொழில் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தனவும் கலந்து கொண்டார்.

ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்கும் நோக்கில் தேசிய உணவு அபிவிருத்திச் சபை- கமத்தொழில் அமைச்சுடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் சில பாடசாலை மாணவர்கள் குறை போஷாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தினூடாக சில தானியங்களை ஒன்றாக்கி ருசித்து சாப்பிடும் வகையில் விசேட விதமாக தயாரிக்கப்பட்ட உணவு மாணவர்களுக்கு வழுங்கப்படவுள்ளது.

நாட்டில் மாணவ மாணவியரின் ஆரோக்கியத்தை பேண நிறை போஷாக்கு உணவை பெற்றுக்கொடுப்பதற்காக உணவு அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ள இம்முயற்சி வெற்றியளிக்கும் என கமத்தொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# தேசிய உணவுக்கு முன்னுரிமை



தேசிய உணவு வகைகளை மேலும் ஊக்கப்படுத்தும் நோககில் விவசாய திணைக்களம் நாடளாவிய ரீதியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் குரக்கன் மா மூலம் கஞ்சி தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பொலன்னறுவை மாவட்ட மேலதிகச் செயலாளர் பபாஷலி ஜயலத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது செயலக அதிகாரிகளுக்கு குரக்கன் மாவினால் தயாரிக்கப்பட்ட கஞ்சி பரிமாறப்பட்டது.

பொலன்னறுவை உதவி விவசாய பணிப்பாளர் பிரியந்த வீரசூரிய உட்பட உயரதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தேர்தல் வன்முறைகள் 200

ஊவா மாகாண சபை கலைககப்பட்ட தினத்தில் இருந்து இதுவரையான காலப்பகுதிக்குள் 200 வன்முறை சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன என்று தேரதல்கள் கண்காணிப்பு அமைபபான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மருதானையிலுள்ள சீ.எஸ்.ஆர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஊவா மாகாணத்தில் மொனராகலையை விட பதுளை மாவட்டத்தில் அதிகளவிலான சனத்தொகை காணப்படுகின்றது. இம்மாவட்டத்திலே கூடுதலான வேட்பாளர்களும் போடடியிடுகின்றனர். ஆயினும் மொனராகலை மாவட்டத்திலே 50 வீதமான வன்முறை தொடர்பிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பதுளை மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 07 வீதமான வன்முறை முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன.

குறித்த வன்முறைகள் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்த ஆயுதக்குழுக்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டிக்கலாம் என்றார்.

# 140 ஆவது உலக அஞ்சல் தின தேசியமட்ட நிகழ்வு யாழில்



(யாழ்ப்பாணம்)

140 ஆவது உலக அஞ்சல் தின விழா தேசிய மட்டத்தில் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளதாக வடமாகாண பிரதம தபால் அதிபர் என்.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் 9 ஆம் திகதி நாச்சிமார் கோவிலடியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் இதன் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் தொலைத்தொடர்பு அமைச்சர், மற்றும் பிரதி அமைச்சர், தபால் மா அதிபர், மேலும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அஞ்சல் உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொள்வதுடன் திறமையாக செயற்பட்ட தபால் அதிகர்கள், மற்றும் ஊழியர்கள் கௌரவிக்கப்படவும் உள்ளனர்.

இதனை முன்னிட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒரேநாளில் அஞ்சலட்டை வழங்கும் சேவை, தபாலகங்களில் சிரமதானம், இரத்த தானம், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வியாபார நிறுவனங்களை அறிமுகம் செய்யும் நூல் வெளியீடு, தேசிய சேமிப்பு வங்கியில சேமிப்பை ஊக்குவிக்கும் திட்டம், மரநடுகை, வைத்தியசாலை சிரமதானம், போன்ற பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்முறை தமிழ்மக்களையும எமது சேவையையும் கௌரவிக்கும் வகையில் இந்த விழா தேசிய மட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது சிறப்பு என அவர் மேலும் தெரிவித்தார். (இ,48,25)

## மனிதவள முகாமைத்துவம் கற்கைநெறிக்கு விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management) மற்றும் பேச்சுமொழி ஆங்கிலத்திற்கான (Spoken English) காலக்கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரணதரத்தில் சித்திபெற்ற அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கை நெறியானது மூன்றுமாத காலங்களைக் கொண்டுள்ளது. இக் கற்றைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத் திலும் இடம்பெறும். விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்திலும், கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாமென யாழ் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(05.09.2014 வெள்ளிக்கிழமை)

ஐய வருஷம் ஆவணி மாதம் 20 ஆம் திகதி.
சித்தம் / துவாதசி.
பூராட நட்சத்திரம் மு.ப. 11.36 வரை. பின் உத்தராடம்.
இராகு காலம் 09.04 - 10.34 வரை. சுபநேரம் 03.04 - 04.34 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | பெற்றோர் மக்களை எண்ணிப் பெருமைப்படல், போட்டிகளில் பங்குபற்றி பாராட்டு பெறல். |
| ரிஷபம் | பெற்றோரின் நிர்ப்பந்தத்திற்கு ஆளாதல், வியாபாரத்தைக்கைவிடுதல். |
| மிதுனம் | பிரச்சினையை தவிர்த்துவிடல், ஒப்பந்த வேலையினால் இலாபமீட்டல். |
| கடகம் | எதிர்பாராத காரியத்தால் வருத்தமடைதல், அழக்கல் நாட்டல் நிகழ்வில் பங்குபற்றி சிறப்பித்தல். |
| சிம்மம் | தொடுத்த வழக்கின் முடிவினால் சாதகமான பதில் கிடைத்தல், வியாபாரத்தில் மந்தமான நிலை காணப்படல். |
| கன்னி | பணம் கொடுக்காமல் ஏமாற்றியவருக்கு எதிராக முறைப்பாடு செய்தல், சகோதரர்கள் ஒத்துழைப்பு. |
| துலாம் | திடீர் பயணம் ஏற்படல், இடமாற்றதால் மனம் பதகளிப்படைதல். |
| விருச்சிகம் | தீர்த்த யாத்திரை சென்று வரும் எண்ணம் மேலிடல், வெளியீட்டு நிகழ்வில் பங்குபற்றி சிறப்பித்தல். |
| தனுசு | கல்விக்காக தனியார் நிறுவனங்களை நாடுதல், மொழிப்பிரச்சினையினால் கருத்தை விளக்கமுடியாது அவதிப்படல். |
| மகரம் | மாணவர் விசாவில் உயர் கல்விக்கழக அழைப்புக் கிடைத்தல், திருமண முயற்சி தோல்வியை தழுவுதல். |
| கும்பம் | செயலுக்கு முட்டுக்கட்டை ஏற்படல், பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தல். |
| மீனம் | அபராதம் செலுத்துதல், வெளிநாட்டினின்றும் திருமண நிமித்தம் மணமக்கள் தாயகம் வருதல். |

## கலந்துரையாடல்

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மனித இருப்பை அச்சுறுத்தும் அசாதாரண காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கொழும்பு பல்கலைக்கழக புவியியல் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஏ.நொபேட் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

## அபிவிருத்தி சீட்டிழுப்பில் 10 ஆயிரம் ரூபா பரிசு

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் உள்ள அபிவிருத்தி லொத்தர் விற்பனை செய்யும் விற்பனை முகவரால் விற்கப்பட்ட அபிவிருத்தி அதிஷ்ட லாப சீட்டிழுப்பில் ஊரெழு வாசிக்கு 10 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது.


கடந்த செவ்வாய்க்கிழமை அபிவிருத்தி அதிஸ்ட சீட்டிழுப்பிலே இத்தொகை பெறப்பட்டதாகவும், பணம் கிடைத்த நபர் மிகவும் கஸ்டப்பட்ட குடும்பஸ்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

## நிறுவுநர் தினமும் சான்றிதழ் வழங்கலும்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தின் 28 ஆவது நிறுவுநர் தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக காகில்ஸ் நிறுவனத்தின் வட பிராந்திய வியாபார அபிவிருத்தி முகாமையாளர் சாமுவேல் நேசராஜ்குமார அவரது பாரியார். திருமதி.எஸ்.நேசராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று 12 ஆம் திருவிழா



### சந்நிதிக்கு வாருங்கள்!

நெஞ்சார வாழ்த்துங்கள் நிறைந்தவாழ்வு வாழவே
அஞ்சாதவேல் இருக்கும் அன்னையான கோவிலடா
பஞ்சாராத்தி பார்த்து பரவுங்களே பார்பதியாள்
பாலகனார் இவரென்றே தலாட்டுங்களே
ஆணவத்தின் அங்குசனார் வாழ்ந்திருக்கும் தேசமடா
பிரணவத்தின் ஆனைமுகனும் அவர்(ன்) தானடைய
வாரணங்கள் ஆயிரமாய் வந்தவனும் வேலவனே வரிசையாய்
சந்நிதிக்கு வந்துபோங்கள் ஆணவம் அடங்குமேடா!


மண்டைதீவு மகிழ்நன்

### பணிந்தோம் முருகா!

செல்வச் சந்நிதி உறையும் செல்வக்குமரனே முருகா!
நல்வித்தை தந்து நல்லருள் புரிவாய் ஞானபண்டிதனே
எல்லோரும் உனைக்காண ஓடோடி வந்தோம் கந்தா
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்ரமணியனே சரணம்!

சிவநெறிகலாநிதி இராசையா ஸ்ரீதரன்

## தெல்லிப்பளை துர்க்கையம்மனை கவிதையால் துதிசெய்வோம்



### குபேரங்கள் தருவாள்!

தஞ்சம் தருமந்தத் தாயாளின் வீடு
தரிசிக்கத் தவறாமல் தினம்தினம் ஓடு
பஞ்சம் பசிபிணி போக்கிட நாடு
பராசக்தி முன்னாலே பணிவுடன் கூடு
சஞ்சலம் நீக்குவாள் சரணங்கள்பாடு
சமர்ப்பணம் இட்டுமே துர்க்கையைத்தேடு
கொஞ்சும் சலங்கைகள் குலுங்கிட வருவாள்
கொடுமைகள் நீக்கிநற் குபேரங்கள் தருவாள்.

ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்

(தெல்லிப்பளை துர்க்கையம்மனுக்கு இன்று சப்பறத் நாள் திருவிழா)



# அரையிறுதிக்கு முன்னேற்றம்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்திற்கு அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முன்னேறியுள்ளார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் 16ஆம் நிலை வீராங்கனையான விக்டோரியோ அசரென்கா (பெலாரஸ்) மகரோவா (ரஷ்யா) மோதினார்கள்.

இதில் 17ஆவது இடத்தில் இருப்பவரான மகரோவா 6-4, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 27 நிமிட நேரம் தேவைப்பட்டது.

மகரோவா முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் அரையிறுதிக்குள் நுழைந்து முத்திரை பதித்தார். அசரென்கா கடந்த 2 முறையும் இறுதிப் போட்டி வரை நுழைந்து இருந்தார். இந்த முறை காலிறுதிலேயே வெளியேறினார்.


உலகின் முதல் நிலை வீராங்கனையும், 5 முறை அமெரிக்க ஓப்பன் பட்டத்தை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), காலிறுதியில் 11ஆம் நிலை வீராங்கனையான பெனட்டாவை (இத்தாலி) எதிர்கொண்டார்.

இதில் செரீனா 6-3, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார். அவர் அரை இறுதியில் மகரோவாவை சந்திக்கிறார்.

அவுஸ்ரேலிய ஓப்பன் சம்பியனும், 3ஆம் நிலை வீரருமான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) காலிறுதியில் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

10ஆம் நிலை வீரரான நிஷி கோரி (ஜப்பான்) 3-6, 7-5, 7-6 (9-7), 6-7 (5-7) 6-4 என்ற செட் கணக்கில் வாவ்ரிங்காவை போராடி வென்று முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அரையிறுதிக்கு தகுதி பெற்றார். கிராண்ட்ஸ்லாம் அரை இறுதியில் நுழைந்த முதல் ஜப்பான் வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். இந்த ஆட்டம் 4 மணி 15 நிமிட நேரம் நடந்தது.

# ரூனி தலைமைக்கு முதல் வெற்றி




ரூனி இங்கிலாந்து கால்பந்து அணியின் கப்டனாக பொறுப்பேற்றதன் பின்னர் இங்கிலாந்து அணி முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

நோர்வை அணியுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற கால்பந்து போட்டியில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

அணிக் கப்டன் ரூனி தண்ட உதையின் அடிப்படையில் பெற்ற கோலின் மூலம் இந்த வெற்றி பதிவாகி யுள்ளது.

இங்கிலாந்து அணி பிரேசிலில் நிறைவடைந்த உலக கிண்ண கால்பந்து போட்டித் தொடரில் தோல்வி கண்டதன் பின்னர், இந்த முதல் வெற்றியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜேர்மனியின் புதிய கப்டன்

(டசல்டர்ப்)

ஜேர்மனி கால்பந்து அணியின் புதிய கப்டனாக ஸ்கீவன்ஸ்டீகர் அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த யூலையில் பிரேசில் நாட்டில் நடைபெற்ற உலக கிண்ண கால்பந்து தொடரில் ஜேர்மனி அணி கிண்ணத்தை வென்று சாதித்தது. இதன் பின் ஜேர்மனி கப்டன் பிலிப் லாம், சர்வதேச கால்பந்து அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். தற்போது இப்பதவிக்கு ஸ்கீவன்ஸ்டீகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உலக கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்றிருந்த இவர், ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் முகத்தில் காயமடைந்ததால் வெளியேறினார். இதுவரை அணிக்காக 108 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர், 23 கோல்கள் அடித்துள்ளார். கிளப் அணியில் பேயர்ன் முனிச் அணி சார்பில் விளையாடி வருகிறார். இது குறித்த ஜேர்மனி அணி பயிற்சியாளர் ஜோச்சிம் லொவ் கூறுகையில், எங்கள் அணிக்கு சிறந்த, தகுதியான கப்டனாக ஸ்கீவன்ஸ்டீகர் திகழ்வார். இவரின் அனுபவம் 2016 இல் நடைபெறவுள்ள ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடரில் உதவும் என்றார். தற்போது, முழங்கால் காயத்தால் அவதிப்பட்டு வரும் இவர், அணியில் இடம்பெறவில்லை.



# ஸ்ரெயினை போட்டுத் தாக்கிய மார்ஷ்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய வீரர் மிட்செல் மார்ஷ் அரிய சாதனை ஒன்றை நிகழ்த்தினார். அதாவது தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் பந்து வீச்சில் ஒரே ஓவரில் தொடர்ச்சியாக 3 சிக்சர்களை விளாசினார் மார்ஷ்.

ஆட்டத்தின் 47ஆவது ஓவரை ஸ்ரெய்ன் வீச வந்தார். முதல் பந்து ஓப் ஸ்டம்பிற்கு வெளியே லெந்தாக வந்த பந்தை நேராக தூக்கி அடித்தார் முதல் சிக்சர். சற்றே கடுப்பான ஸ்ரெய்ன் அடுத்த பந்தை ஷொட் பிட்சாக வீச அதனை வெறி கொண்டு புல் ஆடி லோங் ஓனில் சிக்ஸ் அடித்தார். அடுத்த பந்தை கொஞ்சம் வைடாக வீசினார் ஸ்ரெய்ன் ஆனாலும் விடாத மார்ஷ் லோங் ஓப் திசையில் தூக்கி சிக்சர் அடித்தார். ஸ்ரெய்ன் பந்து வீச்சில் சர்வதேச கிரிக்கெட்டில் எந்த துடுப்பாட்ட வீரரும் 3 சிக்சர்களை அடித்ததில்லை. ஒரு நாள் போட்டிகளில் 5 முறை ஸ்ரெய்ன் ஓவரில் 2 சிச்கர்கள் அடிக்கப்பட்டுள்ளன. டெஸ்ட் போட்டிகளில் ஒரே ஓவரில் 2 சிக்சர்கள் 2 முறை அடிக்கப்பட்டுள்ளன. ஆனால் 3 சிக்சர்கள் இதுவே முதல் முறை. அந்த ஓவரில் அரைசதம் கண்ட மார்ஷ் 21 ஓட்டங்களை ஸ்ரெய்ன் ஓவரில் விளாசினார். இந்த ஒரு ஓவர் ஆட்டத்தின் போக்கை மாற்றியது. இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியை 62 ஓட்டங்களால் வெற்றிகொண்டதன் மூலம் அவுஸ்ரேலிய அணி முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மென்பந்து கிரிக்கெட் இன்று இறுதியாட்டம்




மாதகல் நாவலர் புயல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட மட்டத்தில் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இன்று மாலை 4.00 மணிக்கு மாதகல் சென். ஜோசப் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. நாவலர் புயல் விளையாட்டுக் கழக தலைவர் எஸ்.உமேஷ்காந் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வி.நடராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட வுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# களத்திற்கு வெளியில்...

இந்தியாவில் வேகப் பந்துவிச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படுவது என்பது கடினமான ஒன்றாகும். இந்தியாவில் சிறப்பாகச் செயற்பட்டால் உலகில் வேறு எந்த இடத்திலும் சிறப்பாகச் செயற்பட முடியும். எனவே இந்தியாவில் வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்கும் பணியை எம்.ஆர்.எ.ப். நிறுவனம் செய்து வருகிறது. இங்கு வீரர்களுக்கு யுக்திகளை செயற்படுத்த, பயோ-மெக்கானிக்கல் சோதனை உள்ளிட்டவற்றை ஆராய்ந்து சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதற்குள் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் மகிழ்ச்சி.

**மெக்ராத் (அவுஸ்ரேலியா)**

போல்ட் பந்துவீசுவதை அருகிலிருந்து பார்த்தார், வியப்பாக இருந்தது. ஒரு சிறப்பான கிரிக்கெட் வீரரைப்போல, கீரிசிலிருந்து நின்று கொண்டு சரியாக பந்துவீசினார். இதை எல்லாம், பார்க்கும்போது, கிரிக்கெட் இவரின் ரத்தத்திலேயே கலந்து உள்ளது என நினைக்கிறேன். கிரிக்கெட்டில் களமிறங்கினாலும், இவருக்கு வெற்றியே கிடைக்கும். இவரின் பயிற்சி முறை பற்றி விவாதித்தார். இவர் சம்பியனாக வலம் வருவதற்கு பின்னால், மிகப்பெரிய கடின உழைப்பு உள்ளது. இரசிகர்களுடன் சகஜமாக இவர் பழகுவதை பார்த்தேன். குறைந்தது 100 இரசிகர்களிடமாவது கை குலுக்கி இருப்பார். போட்டி முடிந்தபின், பலர் இவரின் வெற்றியைக் கொண்டாடினர்.

**ஹர்பஜன்சிங் (இந்தியா)**

அடுத்த ஆறு மாதத்தில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலக கிண்ணத் தொடரில் விளையாடவுள்ளோம். இந்நிலையில், இங்கிலாந்து மண்ணில் ஒருநாள் தொடரை வென்றமை, மிகப்பெரிய நம்பிக்கையை கொடுத்துள்ளது. டெஸ்ட் தொடரில் மோசமாக தோற்ற நிலையில், நான் மட்டுல்ல, ஒட்டுமொத்த அணியும் துவண்டு கிடந்தது. இதில் இருந்து எப்படி மீண்டு வந்தோம் என்பது தான் இப்போதைய கேள்வி. ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து, இதிலிருந்து வெற்றிகரமாக மீண்டு வந்தனர். உண்மையில் இந்திய வீரர்களை நினைக்க பெருமையாக உள்ளது. என்னைப் பொறுத்த வரையில், வெளிப்படையாக சொல்வதென்றால் டெஸ்ட் தொடர் மற்றும் முதல் இரு ஒரு நாள் போட்டிகள் வரை, மோசமான நிலையில் தான் இருந்தேன். இது அனைத்து துடுப்பாட்ட வீரர்களுக்கும் நடக்கக் கூடிய இயல்பான விடயம் தான்.

**தவான் (இந்தியா)**

இந்திய அணியில் உள்ள வீரர்களை நான் நன்றாக அறிவேன். அவர்கள் திறமை என்ன என்பது எனக்குத் தெரியும். டெஸ்ட் போட்டிகளில் இந்த அணி நிச்சயம் மீண்டும் எழுச்சியுறும். நான் விடயங்களை தன்னம்பிக்கையான மனோநிலையில் அணுகுபவன். ஒரு நாள் போட்டிகளில் இந்திய அணி எப்படி ஆடுகிறது என்று பாருங்கள், போராடும் குணத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆதிக்கம் செலுத்துகின்றனர். எதிர்வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிகளில் இந்தியாவுக்கு பலமான இடம் உள்ளது. இந்த அணியில் சமச்சீரான தன்மை உள்ளது வீழ்த்துவது கடினம்.

**சச்சின் (இந்தியா)**

இங்கிலாந்தின் ஆட்டம் இரசிகர்களுக்கு சலிப்பை ஏற்படுத்தும் வகையில் இருக்கிறது. வீரர்களின் ஆட்டமுறை காலாவதியான ஆட்டமுறையாக இருக்கிறது. மற்ற அணிகளின் உத்திகள், வேகத்துக்கு பின்தங்கியிருக்கிறோம். கப்டன் குக் தலைமையில் அணி தொடர்ந்து தோல்விகளையே சந்திக்கிறது. அவர் டெஸ்ட் போட்டியில் சிறப்பாக செயற்படுகிறார். டெஸ்டில் மட்டுமே அவர் கவனம் செலுத்தலாம்.

**ஸ்வான் (இங்கிலாந்து)**

இங்கிலாந்து வீரர்கள் மனநிலையை மாற்றினால் மட்டும் போதாது. ஆட்ட முறையையும் மாற்ற வேண்டும். 1995ஆம் ஆண்டில் விளையாடியதைப் போலவே இப்பவும் வீரர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அணியிலும் கப்டன் பதவியிலும் நிர்வாகத்திலும் முக்கிய மாற்றங்கள் தேவை.

**ஸ்ரூவேர்ட் (இங்கிலாந்து)**

போட்டி என்றால் வெற்றி தோல்வி இயல்பானது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்ற பின், இப்போது ஒரு நாள் போட்டியில் விளையாடும் விதம் வேதனை அளிக்கிறது. இந்த தோல்விக்காக கப்டன் பதவியிலிருந்து விலகும் பேச்சுக்கே இடமில்லை. வாய்ப்பளித்தால், அடுத்தாண்டு அவுஸ்ரேலியா-நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலக கோப்பை தொடரிலும் கப்டனாக செயற்படுவேன். 3 ஆண்டாக கப்டனாக இருந்துள்ள எனக்கு, இம்முறை அணிக்கு உலகக் கோப்பையை வென்று கொடுக்க வேண்டுமென்பதே ஒரே குறிக்கோள்.

**குக் (இங்கிலாந்து**

எனது 100 மீற்றர் ஓட்ட சாதனையை முறியடிப்பது என்பது முடியாத காரியம். தடகள வீரர் என்ற முறையில் சாதனைகள் படைக்கப்படுவதையும், அவை தகர்க்கப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் என்னுடைய சாதனைகள் சிறப்பானவையாகும் இவற்றை தகர்ப்பது என்பது மிகவும் கடினம் அதற்காக கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். தற்போது என்னுடன் போட்டியிடும் வீரர்கள் யாராலும் எனது சாதனையை தகர்க்க முடியாது. என்னை யாரும் தோற்கடிக்க விடமாட்டேன். எனது தந்தை மிகப்பெரிய கிரிக்கெட் இரசிகர். நான் மேல்நிலைப்பள்ளி படிக்கும் போது கிரிக்கெட் அல்லது தடகளத்தை தேர்வு செய்யலாம் என்று நினைக்கையில், ஜமேக்காவை பொறுத்தமட்டில் கிரிக்கெட் அணியில் இடம் பிடிப்பது கடினம். எனவே தடகளத்தில் கவனம் செலுத்தும்படி எனது தந்தை அறிவுறுத்தினார். நான் எனக்கு பிடித்தமான கிரிக்கெட்டை தேர்வு செய்ய முடியாததற்கு எனது தந்தையே காரணம்.

**போல்ட் (ஜமேக்கா)**

# தேசிய பெருவிளையாட்டு இன்று முதல் ஆரம்பம்

## பதக்கம் வெல்லும் முனைப்புடன் வடமாகாண பாடசாலை வீரர்கள்




(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன.

இதில் ஆறாம், ஏழாம் திகதிகளில் ஒன்பது போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் வயது அடிப்படையில் இடம்பெறவுள்ளன. இதன் படி நாளை ஆண், பெண்களுக்கான நீச்சல் போட்டி கொழும்பு சுகததாச நீச்சல் தடாகத்திலும், ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம்

வரை அம்பாறை பொது விளையாட்டு மைதானம் மற்றும் அம்பாறை சேனநாயக்க மத்திய மகா வித்தியாலயத்திலும், ஆண், பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டி நாளை முதல் நாளை மறுதினம் வரை வயங்கொட சியான தேசிய கல்லூரி மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான ஜூடோ போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை ஹம்பலை விக்ரம பாகு தேசிய பாடசாலையிலும், ஆண், பெண்களுக்கான கராத்தே போட்டி இன்று முதல் நாளை மறு தினம் வரை கிரிபத்கொட விக்ரமதேவி மகளிர் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. ஆண், பெண்களுக்கான சதுரங்கப் போட்டி இன்று முதல் நாளை மறுதினம் வரை கண்டி நுகவெல மத்திய மகாவித்தியால யத்திலும், ஆண், பெண்களுக்கான எல்லே போட்டி இன்று முதல் நாளை மறுதின்ம் வரை அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலயம், கஜ பாகு படையணி விளையாட்டு மைதானம் மற்றும் மிகிந்தலை ராஜரட்டை பல்கலைக்கழக மைதானத்திலும், ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை மறு தினம் அநுராதபுரம் மத்திய மகாவித்தியாலயத்திலும், ஆண், பெண்களுக்கான அரை மரதன் போட்டி நாளை மறுதினம் பாணந்துறை ஸ்ரீ சுமங்கல ஆண்கள் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல வீர,வீராங்கனைகள் பங்குகொள்கின்ற அதே வேளை, பதக்கம் வெல்லும் முனைப்புடன் களத்தில் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாக் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

# நாவாந்துறை சென்.மேரிஸ் அரையிறுதியில் வெற்றி

(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கீத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் முகமாக வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டி ஒன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் மோதின. இரு அணிகளுமே சம பலம் கொண்ட அணிகள் போன்று களத்தில் செயற்பட்டதுடன் மாறி மாறி கோல்களைப் பெற்றுக் கொண்டன. வெற்றி கோலைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் இரு அணிகளும் இறுதி வரைபோராடிய போதிலும் அந்த முயற்சி கைகூடவில்லை. முடிவில் 3-3 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்றைய் தினம் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவான அணிகள் ஒன்றை ஒன்று மாறி மாறி மோதவுள்ள அதே வேளை, நிறைவில் புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.(93)

# மூன்றாமிடம் கம்பர்மலை யங்கமன்ஸ்

(பருத்தித்துறை)

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை கம்பர்மலை யங்கமன்ஸ் அணி பிடித்துக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உடுத்துவை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடாத்திய அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான ஆட்டம் கடந்த வியாழக்கிழமை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உடுப்பிட்டி யூத் அணியும் கம்பர்மலை யங்கமன்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் .5ஆவது நிமிடத்தில் யங்கமன்ஸ் வீரர் குகரதன் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் உடுப்பிட்டி யூத் அணி செயற்பட்டபோதிலும் எந்த முயற்சியும் கைகூடவில்லை. அதேவேளை சிறப்பான முறையில் செயற்பட்டு வந்த யங்கமன்ஸ் அணி ஆட்டம் நிறைவடைய இரு நிமிடங்கள் இருக்கையில் மேலுமொரு கோலைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் கம்பர்மலை யங்கமன்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டித் தொடரில் 12 கோல்களைப் போட்டுக் கொண்ட யங்கமன்ஸ் வீரர் குகவரதனுக்கு ஆட்டநாயகன் விருதுடன் 50ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கப் பந்தும் வழங்கப்பட்டது. (93,12)

# 3 நாள் கால்பந்து பயிற்சி

## சென். ஜோண்ஸில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் ஒழுங்குபடுத்தலில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் வீரர்களுக்கான மூன்று நாள் கால்பந்து பயிற்சி முகாம் இன்று முதல் நாளை மறுதினம் வரை சென். ஜோண்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சர்வதேச கால்பந்தாட்ட வளவாளர்கள் பலர் கலந்து கொண்டு கால்பந்து போட்டி குறித்து செயன்முறை விளக்கங்கள் வழங்கவுள்ளனர். குறிப்பாக, சிங்கப்பூரிலிருந்து சுப்பிரமணியம் என்பவர் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு தமிழ் மொழியில் விளக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# துரையப்பாவில் நாளை மாவட்ட விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டு விழா நாளையும், நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதில் தண்ணீர், மைதான ஒழுங்குகள் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்களின் உதவியுடன் சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகன்ராஜ் தெரிவித்துள்ளார். (93)

# கிண்ணம் வென்றது மன்னார் நகர் ஐக்கியம்

(மன்னார்)

மன்னார் பெரியமடு ஈச்சளவக்கை மருதம் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஜோசப் வாஸ் நகர் ஐக்கிய அணி கைப்பற்றிக்கொண்டது.

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈச்சளவக்கை மருதம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஜோசப் வாஸ் நகர் ஐக்கிய அணியும் பள்ளிமுனை சென். லூட்சிய அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஜோசப் வாஸ் நக் ஐக்கிய அணி இரு கோல்கலைப் போட்டு முன்னிலை பெற்றது.

இதற்குப் பதில் கோல் போட கடும் பிரயத்தனம் செய்த பள்ளிமுனை சென். லூட்சிய அணியால் ஒரு கோலை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

நிறைவில் ஜோசப் வாஸ் நகர் ஐக்கிய அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியின் சிறந்த வீரராக டொசில், சிறந்த கோல் காப்பாளராக போல் லெனின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# இன்று இறுதி ஒரு நாள் போட்டி

(லண்டன்)

இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்று லண்டன் லீட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டித்தொடரை 3-0 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றிக் கொண்ட நிலையில் ஆறுதல் வெற்றிக்காக இங்கிலாந்து அணி போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் டெஸ்ட் தொடரில் அடைந்த படுதோல்வியை ஈடு செய்யும் வகையில் ஐந்தாவது ஆட்டத்தில் வெற்றிக்கான வியூகத்தை இந்திய அணி வகுத்துக் கொள்ளும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# மைதானங்கள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் துரிதம்



யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்ட மைதானங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை துரிதப் படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற யாழ்.மாவட்ட கூடைப்பந்து, கரப்பந்து சங்கங்களினது பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த இரண்டு விளையாட்டுகளுக்குமான மைதானத்தை பழைய பூங்கா வளாகத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன.

அந்தவகையில், குறித்த மைதானங்களை செப்பனிடும் வகையில் சிரமதானத்தை ஏற்பாடு செய்து துரிதப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்த அமைச்சர், மேலும் பட்மின்ரன், வலைப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கான மைதானங்களை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

இதன்பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் குறித்த விளையாட்டுத்துறைகளை வளர்த்தெடுக்கும் முகமாக விளையாட்டுக் குழுவொன்றை அமைத்து அதன்மூலம் திட்டங்களை முன்னெடுக்கவும் அமைச்சர் விசேட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு திட்டங்களை சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே விளையாட்டு மைதானங்களின் உட்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாவட்ட நில அளவையாளர் சிவதாஸ், யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, கரப்பந்தாட்ட மற்றும் கூட்டமைப்பந்தச் சங்கத் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சொன்னார்கள்....

13அவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பால் செல்லல், மாகாண இணைப்பு மற்றும் இலங்கைக்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்கள் காட்டிய அக்கறையின்மையை கவனிக்கும் போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்ற விடயம் தவிர்ந்த எந்தவொரு விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்க இந்திய அரசாங்கம் நினைக்கவில்லை என்பதே உண்மையாகும்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டாலும், அது இந்திய அரசாங்கத்தினால் கடந்த இரண்டு தசாப்தங்களாக வலியுறுத்தி வரும் ஒரு விடயமாகும். அதன் மூலம் இலங்கை அரசியலமைப்பில் உள்ளதன் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதையே இந்தியா கூறி வருகிற தேயல்லாமல் வேறொன்றையும் வலியுறுத்தவில்லை. மாகாண சபைகளுக்கு இந்த அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று இது போன்ற சந்திப்புக்களின் போது வலியுறுத்தி வந்ததே தவிர அந்த விடயத்திலும் இந்தியா - இலங்கை அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்கவில்லை.

எனவே, இந்தியாவை ஆத்திர மூட்டாமல் இருந்தால் மேலும் பல வருடங்களுக்கு அதிகார பரவலாக்கல் என்ற விடயத்தில் தற்போதைய நிலைக்கு அப்பால் செல்ல வேண்டிய நிலைமை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படாது.

- எம்.எஸ்.எம்.ஐயூப்

இந்தியாவின் நிலைப்பாட்டை விளங்கிக்கொண்ட வகையில் கூட்டமைப்புத் தலைவர்கள் புரிந்திருக்க வேண்டும். இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்று பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து அரசியல் தீர்வு முயற்சியை ஆரம்பிப்பதா அல்லது இந்தியாவின் நிலைப்பாட்டை நிராகரித்துச் சர்வதேச சமூகத்தின் பக்கம் திரும்புவதா என்பதையிட்டுத் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய கட்டத்தில் கூட்டமைப்பு நிற்கின்றது.

இந்த வியத்தில் தலைவர்களின் அகவய உணர்வுகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் நலன்தான் முக்கியத்துவம் பெற வேண்டும். இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் நலன் தங்கியுள்ளது. குறைவான அதிகாரங்களைக் கொண்டதாக இருப்பினும், அதுவே இன்றைய நிலையில் சாத்தியமானதென்றால் அதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து அரசியல் தீர்வுக்கான முயற்சியை முன்னெடுப்பதுதான் ஆக்கபூர்வமான அணுகுமுறை.

- சிவா சுப்பிரமணியம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதுடில்லியின் உதவியின் மூலம் ஓர் அரசியல் தீர்வைப் பெறுவதில் உறுதியாக இருப்பது உண்மையாயின், பொறுமையாகவும் நிதானமாகவும் பயணிப்பதை தவிர வேறு தெரிவுகள் எதுவும் கூட்டமைப்பிடம் இல்லை. அதற்கு முதலில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அல்லது அதனை ஒரு சட்டமாகக் கொண்டு, ஒரு நிரந்த்ரத் தீர்வைக் காணுவதில் தாம் உறுதியாக இருக்கிறோம் என்பதை கூட்டமைப்பின்

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக இந்தியாவின் அனுசரணையை ஏற்றுச் செயற்படுவதும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதும் சமகாலத்தில் சாத்தியமில்லை என்பதை

தலைமை தெளிவுபடுத்த வேண்டும். அது ஒன்றுதான் புதுடில்லி தமிழர் விவகாரத்தை உரிமையுடன் வலியுறுத்துவதற்கான வாயிலாக அமையும்.

- யதீந்திரா



இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியில் சம்பந்தர் இருக்கத்தக்கதாக வலிமையான தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து மாவையை நகர்த்த முயற்சிப்பது அவருக்கு அளிக்கப்படும் உயர்ச்சி என்று யாரும் கூறுவார்களேயானால் அது "வஞ்சப் புகழ்ச்சி" என்றுதான் கருதப்பட வேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர், செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் என்ற பதவிகளை வரிசைப்படுத்துவோமாயின் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் பதவியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியுமே இன்றைய நிலையில் அதிகார வரிசையில் முன்நிற்பவையாகும்.

தேர்தல்கள் தொடர்பான வேட்புமனுக்களை கட்சி சார்பில் உறுதிப்படுத்தும் அதிகாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரிடமே உண்டு. இப்போதைய நிலையில் அந்த அதிகாரம் மாவை சேனாதிராஜா வசமே உள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், சர்வதேச ரீதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்பாடல் வைக்கப்படும்போது கூட்டமைப்புத் தலைவர் பதவி முக்கியத்துவம் பெறுகின்றது. அதற்கு அடுத்தது, தேர்தல்கள் தொடர்பான கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அதிகாரங்களைப் பிரயோகிக்கும் தகைமையுடைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியே முக்கியமானது; அதிகாரம் கூடியது. இவற்றைத் தாண்டித்தான், இன்றைய அரசியல் களச் சூழலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவி என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

எனவே, ஒரு வகையில் பார்த்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து கட்சியின் தலைவர் பதவிக்கு மாவை சேனாதிராஜா மாற்றப்படுகின்றமை ஓர் உயர்வே அல்ல, பதவியிறக்கமே.


வடக்கு மாகாண முதலமைச்சர் பதவி மீது நீங்காப்பற்று வைத்திருந்தார் மாவை சேனாதிராஜா. அது அவரிடமிருந்து தட்டிப் பறிக்கப்பட்டது. அதனையடுத்து இப்போது மேனிலை அதிகார வட்டம் சம்பந்தர் - விக்னேஸ்வரன் - சுமந்திரன் எனச் சுருங்கிவிட்டது. அந்த மேனிலை அதிகார வட்டத்துக்குள் மாவை சேனாதிராஜா நிற்க வேண்டுமானால் குறைந்த பட்சம் தேர்தல்கள் தொடர்பான விடயத்தில் கையொப்பமிடும் மிக முக்கிய அதிகார வலுவாவது அவரிடம் தொடர்ந்து இருப்பது அவசியம். பதவி நிலை உயர்வு என்ற பெயரில் அதனை அவர் கோட்டை விடத் தயாராகி விட்டாரா என்பதை அடுத்து வரும் வாரங்கள் உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

- வி.சிவராம்

# யாரும் கண்டுபிடிக்க முடியாத இடம்!

மனிதர்கள் கடவுளிடம் சென்று பல புகார்களைக் கூறியபடியே இருந்தார்கள். அது சரியில்லை, இது சரியில்லை, இதைக் கொடு, அதைக் கொடு, தன்னை ஏமாற்றுகிறார்கள், சோதனை வருகிறது, வேலையில்லை, கடன் தொல்லை, புது வீடு வேண்டும், காசு வேண்டும், உன் ஆசீர்வாதம் வேண்டும், வழக்காளியும் - எதிரியும் தங்கள் பக்கம் வெல்வதற்காக நேர்த்தி, உன்னை நம்பி புது வியாபாரம், சாவியை உன் காலடியில் வைக்கிறேன், உன்னை நம்பி முதல் போடுகிறேன், என்னைக் கவனித்துக் கொள், என்னைச் சுகப்படுத்து....

இப்படி ஏகப்பட்ட புகார்கள், வேண்டுகோள்கள்.. வ்வொரு புகாரையும் எடுத்துச் சரிசெய்து கொடுத்தால் அடுத்த வரைப் பாதிக்கிறது, பின் வேறொரு புதிய பிரச்சினையுடன் வருகிறார்கள்!



இவ்வளவு தொல்லைகளில் இருந்தும் விடுபட என்ன செய்யலாம்? எங்கு செல்லலாம்? இமயமலை உச்சிக்குப் போகலாமா? ம்ஹூம். அங்கு மலை ஏறுபவர்கள் வந்து விடுவார்கள். சந்திரனில் போய் இருப்போமா... அங்கே மனிதனை அனுப்பி சில காலம் தங்க வைக்க ரஷ்யாவும், அமெரிக்காவும் போட்டா போட்டி போட்டுக்கொண்டு அனுப்பும் விஞ்ஞானிகள் அங்கு என்னைக் கண்டதும் பிரயாண நிறுவனம் ஆரம்பித்து சந்திர மண்டல இன்பச் சுற்றுலா யாத்திரை ஆரம்பித்து விடுவார்களே!

மனிதர்களிடமிருந்து தப்ப யாரும் பார்க்க முடியாத இடம், யாரும் தேட முடியாத இடம், யாரும் யோசிக்க முடியாத இடம் என்று கடவுள் நெடுநேரம் யோசித்தும் அவருக்கு ஓர் இடமும் புலப்படவில்லை. ரொம்ப நாள் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கடவுளுக்கு அப்படிப்பட்ட ஓர் இடம் இருப்பதை அறிந்து கொண்டார்! அங்கு யாரும் வரவே மாட்டார்கள்!

இந்த மனிதர்கள் தங்களைத் தவிர பிறரை ஆராய்வார்கள். தங்கள் மீது நம்பிக்கை அற்றவர்கள் தங்களுக்குள் பார்ப்பதில்லை. பிற இடங்களில் தேடுவார்கள். தங்களுக்குள் தேடுவதில்லை. தங்களை அறிவதில்லை. தங்களை உணர்வதில்லை. கோயில், பூசை, அபிஷேகங்கள், மசூதி, தேவாலயம், தர்மசாலை, சினாகோஜ் என்று தங்களுக்கு விரும்பிய இடங்களில் தங்களைத் தாங்களே புறக்கணித்து விடுவார்கள். சரியான, பாதுகாப்பான, தொந்தரவு இல்லாத "தான்" இருப்பதற்கு ஏற்ற இடம் "இந்த மனிதனின் உள்ளே" இருப்பது எனக் கடவுள் முடிவு எடுத்துவிட்டார்! கடவுள் மனிதனின் உள்ளே புகுந்துவிட்டார்!

என்ன ஆச்சரியம்! அவரை யாரும் கண்டுகொள்ளவே இல்லை! கடவுளின் முடிவு சரியானதாகவே அமைந்துவிட்டது!

('மறுபிறப்பு: ஆச்சரியமான தகவல்கள்' நூலில் எஸ். குருபாதம்)

சினிமாவில் நல்ல பாடல்களை எழுத வேண்டும் என்று தான் எனக்கும் ஆசை; ஆனால் தயாரிப்பாளர்கள் "சிற்றின்பத்தை அப்படியே பிழிந்து கொடு..." என்று தான் பேச்சை ஆரம்பிக்கின்றனர்.

ஒருமுறை ஒரு துண்டை மட்டும் அணிந்திருந்த ஒரு பெண்ணை வர்ணித்து, "எழுது பாட்டை..." என்றனர். எனக்கோ எரிச்சலான எரிச்சல் அந்தப் பெண்ணை பார்க்கவே சகிக்கவில்லை. இந்த லட்சணத்தில் பாட்டு எப்படி எழுதுவது?

"ஆண்டவன் படைத்த
உடம்பு தானே
ஆடை என்ன
அவசியமா?"

என்று எழுதி விட்டேன்.

"இப்படி எழுதி விட்டீர்களே... சென்சார் அனுமதிக்குமா" என்று கேட்டார் தயாரிப்பாளர். "உங்க படத்தையே அனுமதிக்கிற சென்சார், என்னுடைய பாட்டை நிச்சயம் அனுமதிக்கும்..." என்று சொன்னேன்.



## கண்ணதாசன் சொல்லியது:

அது, ஒரு விதமான சமர்க்களம்!

சக மாந்தரால் உதைபட்டும் அவர் வார்த்தைகளால் வதைபட்டும் பதறித் தவித்தபடி பரிதாபப் பிறவிகள் உதவுவார் எவருமின்றி, தற்காத்துக் கொள்ளத் திறனுமின்றிக் குற்றுயிராய்க் கிடக்கின்றன.

சுற்றிவர, சற்றுத்தொலைவில் "கழுகுகள்" சில காத்துக் கொண்டிருக்கின்றன அவசரம் காட்டாமலேயே அவற்றுக்குத் தெரியும், துடிக்கும் உடலங்கள் கொஞ்சநேரத்தில் அடங்கி - சடலங்களாய் தமக்கு விருந்தாக வாய்க்குமென்று.

இன்னொரு காட்சி...!

வீடு பற்றி எரிகிறது. பதை பதைத்தபடி வீட்டுரிமையாளர் அங்குமிங்கும் அலைந்து தீயை அணைப்பதற்கு முயல்கின்றனர். அயலவர் ஆதரவு சிறிதேனும் கிடைப்பதாக இல்லை. அரைகுறையாக எரிந்து தணிந்த சம்பத்துக்களை அள்ளி அப்புறப்படுத்தி விட்டு, விரக்தி மேலிட விலகிச் செல்கின்றார் அந்த வீட்டுக்காரர்.

இதற்காகவே காத்திருந்த மாதிரி ஒரு கும்பல் அகப்பட்டனவற்றைத் தேர்ந்து எடுத்துப் போகிறது. ஒருவன், சாவகாசமாக குறங்கொள்ளியெடுத்து சுருட்டுப் பற்றவைத்தபடி நண்பியைக் கட்டுகிறான்.

இவ்வாறான "பிணந்தின்னிக் கழுகுகளும்", "எரிகிற வீட்டில் எஞ்சியதை அபகரிக்கும் அடாவடிக் கூட்டமும்" இப்போதும் இல்லாமலில்லை. அப்பட்டமான சுயநலமும், பிறர் அவலங்களில் ஆதாயந்தேடும் அயோக்கியத்தனமும் தொடர்ந்து நிலவுகின்றன.

தனிநபர் ஒருவருக்கு அல்லது குடும்பமொன்றிற்கு அவலங்கள் ஆரம்பிக்கையில் பாராமுகமாக இருந்துவிட்டு, பின்னர் - அவை

# அன்னையின் திண்ணை



— இடைக்காடு இளைய பண்டிதன்

புரையோடிப்போய் கரைகாண முடியாத கட்டத்தை எட்டுகையில் - தமக்கு யாதேனும் இலாபம் கிட்டுமாயிருந்தால் மட்டுமே - அவசரமாகத் தலையிடுவது, சொந்தபந்தங்கள் எனச் சொல்லிக் கொள்வோருள்ளேயும் உண்டு.

இதில், தமக்குள்ளே போட்டியிட்டு ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முனைவதும் நடக்கும். திருமண பந்தத்தினால் நெருக்கமான உறவுகள் மாத்திரமல்லாது, இரத்த உறவுகள் கூட இவ்விடயத்தில் விதிவிலக்கல்ல!

அனுதாபப்பட வேண்டிய அந்த அபாக்கியசாலிகளின் பலவீனங்களை அளந்து அறிந்து, தமது ஆதிக்கத்தை அங்கு நிலை நாட்டிக்கொள்வதே இவர்களின் ஒரே குறிக்கோளாகும்.

அதே சமயத்தில் சம்பந்தப்பட்ட நெருக்கடிகளிலிருந்து அந்த உறவுகளை மீட்க வந்த "மீட்பர்களாக" தம்மை வெளியுலகிற்கு விளம்பரப்படுத்தவும் செய்வர்.

தொடக்கத்திலிருந்தே துயரங்கள் தொடர்கையில், "நம்மளுக் [illegible]ன?" என்று தூர விலகி நின்ற இவர்கள், "இப்படியாக இச்சொந்தங்கள் நொடித்துப்போகும் என்று முன்பே தெரியாமல் போய்விட்டதே!" என்றவாறு நயவஞ்சமாக நடித்தும் கொள்வர்.

உண்மையில் - பாதிக்கப்பட்டவரின் மனநிலை பற்றியோ, அவர்களின் எதிர்காலம் குறித்தோ எள்ளளவும் அக்கறையற்று, இப்போது - தாம் உண்டு தம்பாடு உண்டு எனத் தமது கருமங்களையே கவனித்துக் கொண்டிருப்பர்.

இத்தகையோரின் எண்ணப்பாங்கினைப் பற்றி, "அண்ணை எப்போ சாவார், திண்ணை எப்போ காலியாகும்?" என்று, அனுபவ அறிவில்லாமலா அன்று சொல்லி வைத்தார்கள்?!



பார்வையாளர்களை உணர்வு உச்சத்தில் தள்ளும் ஒரு மசாலா சினிமா காட்சிக் கோர்வையை உருவாக்குவது அத்தனை சாதாரணமானதல்ல. Charisma பிரகாசிக்கும் ஒரு நடிகர், மாய்மால கமெராக் கோணங்கள், நரம்புகளை புடைக்கவைக்கும் அதிரடியான பின்னணி இசை, எளிமையான ஆனால் அனல் பறக்கும் வசனங்கள் இவற்றை திறமையாக தொகுத்து பயன்படுத்திக் கொள்ளும் நுட்ப மனம் வாய்ந்த இயக்குநர் கொண்ட குழு தேவைப்படுகிறது. இதை ஸ்டீரியோடைப்பாக உபயோகிக்காமல் சதுரங்க விளையாட்டுக் காய்களைப் போல நுட்பமாக நகர்த்தும் கலைமனம் வேண்டும்.

# சிவாஜியைப் போலவே ரஜினியையும் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை

– சுரேஷ் கண்ணன் –

ராம்கோபால்வர்மா இயக்கிய "உதயம்" திரைப்படத்தில் நாகார்ஜுனா சைக்கிள்செயின் உருவும் உராய்வின் சத்தம் பல ஆண்டுகளாகியும் இன்னமும் என் மனக்காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஒரு சண்டைக்காட்சியின் பில்டப்பை அத்தனை வலிமையாய் அமைக்க வேண்டும். ரவுடிகள் நாயகியின் கையைப் பிடித்து அவள் வீல் என்று கத்தியவுடன் எங்கிருந்தோ பாய்ந்து வரும் செயற்கைத்தனமான பின்னணிகளை இப்போது யாரும் ரசிப்பதில்லை.

பாட்ஷா - ரஜினிகாந்தின் தொடர்ஓட்டத்தில் ஒரு முக்கியமான மைல்கல் படம். அவர் ஸ்டார் அந்தஸ்தின் வரைபடம் சர்ரென்ற இன்னுமொரு எகிறலுக்கும், அரசியல்ரீதியான மோதல்களுக்கும், அதை அவர் தனது பிற்கால திரைப்படங்களின் வெற்றிகளுக்காக பயன்படுத்திக் கொண்ட சாமர்த்தியத்திற்கும் அஸ்திவாரம் அமைத்த திரைப்படம். பின்பாதியில் தொய்ந்து போனாலும் முன்பாதியின் அபாரமான திரைக்கதையும் சாமாத்தியமான கலவையும் படத்தின் சுவாரசியத்திற்கு உத்தரவாதமானதாக்கியது.

பிற்பாடு வந்த பல தமிழ்த்திரைப்படங்கள் இந்த திரைக்கதையை புத்திசாலித்தனமாகவும் கேவலமாகவும் உபயோகித்துக் கொண்டன. மிஸ்டர் பாரத், அண்ணாமலை, முத்து போன்ற ஒரே கலவையில் அமைந்த திரைக்கதைகளாக இருந்தாலும், சமூகத்தின் அடித்தட்டிலிருந்து ஒரு சிக்கலான துரோக சந்தர்ப்பத்தில் சவால் விட்டு (ஒரு பாட்டில்) முன்னேறி உயர்நிலையை அடையும் திரைக்கதைகள் சலித்துப் போகாமல் பெரும்பாலான சமூகத்தை கவர்ந்ததில் வியப்பில்லை. ஏனெனில் அது அவர்களுடைய ஆழ்மனதின், பகற்கனவின் வடிகால். சுயமுன்னேற்றப் புத்தகங்கள் போல் இவை யாருக்காவது உத்வேகம் தந்து அதன் மூலமும் யதார்த்ததில் அதை சாதித்திருக்கலாம். சொல்வதற்கு இல்லை. என்றாலும் இந்த பகற்கனவுகளின் போதையில் ஆழ்ந்திருப்பது நமக்கு பிடித்துத்தான் இருக்கிறது.


ரஜினிகாந்த் போல அற்புதமான screen presence உள்ள ஸ்டார் நடிகர்கள் குறைவு. சத்ருகன் சின்ஹாவிடமிருந்தும் அமிதாப் இடமிருந்தும் தனக்கான பாணியை அவர் பெற்றுக் கொண்டாலும் ஆரம்ப திரைப்படங்களிலிருந்தே அவரைக் கவனித்தால் பிரேமின் ஓரத்தில் நின்றிருந்தாலும் பிடிவாதக் குழந்தை போல எப்படியாவது பார்வையாளர்களை கவர்ந்து விடும் நோக்கத்தில் சட்டென விறைப்பாக திரும்புவது, எதிராளியின் பின்பக்கத்திலிருந்து தீக்குச்சியை உரசுவது போன்ற கிம்மிக்ஸ்களின் மூலம் அதிகம் மெனக்கெட்டிருப்பதை கவனிக்க முடியும்.

சிவாஜியைப் போலவே இவரையும் தமிழ் திரையுலகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்கிற ஆதங்கம் இருக்கிறது. மணிரத்னத்தின் "தளபதி" படத்தில் ரஜினி நடிக்கிறார் என்ற செய்தி வந்த போது அதிகம் ஆர்வத்துடன் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் மணிரத்னம் வணிக நிர்ப்பந்தங்களாலோ, அல்லது ஒரு ஸ்டார் நடிகரை இயக்கும் அதிக கவனத்துடனோ என்னவோ.. வழக்கமான ரஜினியையே முன்நிறுத்தி ஏமாற்றியிருந்தார்.

ஒரு நாள் தொலைக்காட்சியில் அவர் நடித்த திரையிசைப்பாடல் ஒன்றை கவனித்துக் கொண்டிருந்தேன். "உள்ளுக்குள்ள சக்ரவர்த்தி" என்ற பாடல் என்பதாக நினைவு.

"புயலாச்சு பெரும் மழையாச்சு, இந்த விளக்கு அதிலும் எரியுது எரியுது" என்கிற வரியில் அவருக்கு வரும் குளோசப்பில் சோகமும் தன்னம்பிக்கையுமானதொரு கலவையான முகபாவத்துடன் தலையை மெல்ல தாழ்த்தி டக்கென்று நிமிர்த்துவார். என்னமோ அந்தக் கணத்தில் ரஜினியின் தீவிர ரசிகனாகி பிறகு சற்று நிதானத்திற்கு வந்தேன். இதுபோன்ற அதிவேக மேனரிசங்களின் மூலம் பார்வையாளர்களைக் கவர்ந்த இந்திய நடிகர் யாராவது இருக்கிறார்களா என்று தெரியவில்லை.

# விதிமுறை 333 வள்ளுவர் வழியில் ஒரு ஃபோர்முலா



இந்நூற்றாண்டில் பல திசைகளில் இருந்தும் செய்திகள் குவிவதால் மக்களுக்கு அவற்றைப் படிப்பதற்கு நேரம் இருப்பதில்லை. நம் கருத்து மிக முக்கியமானது, அது அடுத்தவரைச் சென்று சேரவேண்டும் என்றால் இருக்கும் ஒரே வழி சுருங்கச் சொல்வதே.

இக்காலத் தலைமுறையினரின் கைப்பேசிகளில் செய்திகள் அனுப்பும் பழக்கத்தால் ஆங்கிலம் சிதைகிறது என்பது ஆங்கில மொழி ஆசிரியர்களின் கவலை.

குறைந்த அளவில் சொல்லி நிறைந்த பொருள் தரும் கருத்தை எழுத வேண்டும் என்ற உண்மையைத் தெரிந்திருந்த ஒரே தமிழர் வள்ளுவர்தான். "உங்கள் செய்தியை 140 எழுத்துகளுக்குள் சொல்லவும்" என்ற இக்காலத்திற்கேற்ற நடவடிக்கையை எடுத்த "ட்விட்டர்" சமூக வலைத்தளக் கொள்கையை அன்றே கடைப்பிடித்திருக்கிறார்.

"சொல்வன்மை" என்ற அதிகாரம் வைத்து, அதில் ஒரு பத்து குறளையும் இதற்காக ஒதுக்கியவர் வள்ளுவர்.

கீழே இரு குறள்கள் அவர் சொல்வன்மை பற்றிக் கொண்டிருந்த கொள்கையைக் காட்டுகிறது.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். - குறள் 643
(character with spaces 62)

**உரை:** சொல்லும் போது கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.
- குறள் 649
(character with spaces 54)

**உரை:** குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக்கொண்டிருக்க விரும்புவர்.

இக்கால மக்களின் கவனத்தை ஈர்க்கப் போட்டிகள் பல உள்ளன, நாமும் நம் கருத்துகள் அடுத்தவரை அடைய வேண்டும் என்று விரும்பினால், கேட்பவரது அல்லது படிப்பவரது கவனச் சிதறலைத் தவிர்க்க விரும்பினால்... விதிமுறை 333 (ஃபோர்முலா 333) என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

மக்களிடம் "கவனிக்கும் நேரம்" குறைந்துகொண்டே வருகிறது. நம் மூதாதையர்கள் போல நமக்குப் பெரிய நூல்களைப் படிக்கவோ, நீண்ட திரைப்படங்களைப் பார்க்கவோ பொறுமை இல்லை. "யூ-டியூப்" காணொலி வலைத்தளத்தில் நாம் முதலில் நோட்டமிடுவது ஒரு காணொலியின் நீளம் என்ன என்பதைத்தான்.

அதிக நீளம் உள்ள காணொலி என்றால் பிறகு பார்க்க வேண்டிய பட்டியலில் தள்ளி வைக்கப்படும். மிக நீளமான மின்னஞ்சல்கள் என்றால் பிறகு நேரம் கிடைக்கும் பொழுது படிக்க வேண்டிய கோப்பில் தொகுத்து வைக்கப்படுகின்றன. இவை யாவும் பிறகு நமது கவனத்தைப் பெறாமலேதான் போகின்றன.

நாம் தலைப்புச் செய்திகளை மட்டுமே படிக்கும் தலைமுறை அல்லவா? ஒருவரின் சராசரி கவனிக்கும் காலம் 10 வினாடிகள்தானாம்.

விளம்பரதாரர்களும் தங்கள் பொருளை விற்கும் செய்தியை இக்கால அளவிற்குள் சொன்னால்தான் தகவல் நுகர்வோரைச் சென்றடையும் என்ற அடிப்படையை அறிந்து, தங்கள் விளம்பரங்களை உருவாக்குகிறார்கள். சராசரி யு-டியூப் காணொலிகளின் நீளம் சற்றேறக் குறைய 4 நிமிடங்கள்.

நம்மைப் போலத்தானே பிறரும். எனவே நாம் ஒரு செய்தியைச் சொல்ல விரும்பினால் விதிமுறை 333ஐக் கடைப்பிடிப்போம்.

செய்திகளின் வரம்பு 333 வார்த்தைகள்.

காணொலியின் வரம்பு 3:33 நிமிடங்கள், பாடல்களுக்கும் அதே வரம்புதான்.

# பௌதீக வளப்பற்றாக்குறையிலும் பல்துறைசார் விருத்தி காணும் இளையதம்பி இந்து வித்தியாலயம்




அதிபர்
திருமதி. வரதலட்சுமி கதிரேசபிள்ளை



பிரதி அதிபர்

## பாடசாலை வரலாறு:-

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான யாழ். நகரை அண்டிய வண்ணார்பண்ணை பகுதியில் பாடசாலைகள் இருந்த போதும் அங்குள்ள சைவச்சிறார்கள் கல்வி பயில்வதற்கு சைவப் பாடசாலை அவசியம் என்பது உணரப்பட்டது. இதனால் அவ்வூரில் இந்து மதப்பற்றும் பண்பாடும் உள்ள குடும்பத்தில் செல்லப்பா என்னும் ஏராளனுக்கு மகனாக உதித்த இளையதம்பி என்பவர் இறைபகத்தியும், கருணை உள்ளமும் கொண்டவர் சைவ மக்களின் நன்மை கருதி 1902ஆம் ஆண்டு வண்ணார்பண் ணையில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் அம்பட்டன் கடவை என்னும் இடத்தில் தற்காலிகமாக பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். இதை ஆரம்பிப்பதற்கு இவருக்கு அன்றிருந்த இந்து சமயப் பேரவையும் உதவியாக இருந்தது. ஆரம்பத்தில் இது ஞானானந்த வித்தியாசாலை என அழைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் காணி இல்லாத குறைபாடு காணப்பட்டது செல்லப்பா இளையதம்பி என பவர் இரண்டே மூக்கால் பரப்புடைய தனது சொந்தக் காணியைப் பாடசாலைக்கு வழங்கி அதில் பொது மக்களின் ஒத்துழைப்புடன் ஓலைக் கொட்டில் ஒன்று அமைத்து அதில் பாடசாலையை நடாத்தி வந்தார். 1902 - 1911 வரையான காலப்பகுதியில் செ. இளையதம்பி என்பவரே பாடசாலையின் முகாமையாளராக விளங்கினார். இன்றும் அவ் விடத்திலேயே பாடசாலை இயங்கி வருகிறது. 1911வரை பாடசாலை எதுவித அரச உதவியும் இன்றி இந்து சமயப்பேரவையினதும் முகாமையாளரதும் உதவியுடனேயே இயங்கி வந்தது.

1911 ஆம் ஆண்டு இப்பாடசாலை அரச நன்கொடை பெறும் பாடசாலையாக இயங்கியது 1912 ஆம் ஆண்டு இப்பாடசாலை தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை என்று பெயர் மாற்றம் பெற்று இயங்கியது. ஆறுகால் மடம் பொம்மை வெளி, ஓட்டு மடம், முருக மூர்த்தி கோவில் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு வந்து கல்விகற்கிறார்கள் 1911 -1939 வரை வெவ்வேறு முகாமையாளர்களால் பாடசாலை இயக்கப்பட்டு வந்தது.

1912 இருந்து தரம் 1 -11 வரை வகுப்புக்கள் க.சிவப்பிரகாசம் தலைமையில் இயக்கப்பட்டு வந்தது. 1939 -1947 வரை முகாமையாளராக விளங்கினார் 1947 -1957 வரை இ. கனகசபாபதி முகாமையாளராக இருந்தார். 1952இல் இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்றது. அதிபர் நிர்வாகம் அப்போது பாடசாலையில் பத்து ஆசிரியர்களும் 326 மாணவர்களும் இருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் 1965ஆம் ஆண்டு வரை தரம் 1 -11 வரையான வகுப்புக்கள் இயங்கிவந்தன. 1965 -1985 வரை தரம் 1 -5 வரையான வகுப்புக்கள் உடைய பாடசாலையாக மாற்றப்பட்டது.

ஓலைக்கொட்டிலாக இருந்த பாடசாலை 1969ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியினால் 1969இல் சீமெந்துக் கட்டடம் அமைக்கப்பட்டது. அந்தக் கட்டடத்திலேயே இன்றுவரை பாடசாலை இயங்கி வருகிறது. 1983இல் கா.கணேசதாசன் அதிபராக இருந்த போது பாடசாலை நிறுவுநர் ஆற்றிய சேவையைக் கௌரவிக்கு முகமாக பாடசால்லையின் பெயர் இளையதம்பி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 02.09.1991இல் மு. செலலையா அதிபராக இருந்த காலத்தில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலைக்கீதமும் இயற்றப்பட்டது. 1993இல் பாடசாலையில் கலையரங்க மேடையும், 1999இல் ஜீ.ரி.சற்றின் உதவியுடன் ஆசிரியர் மாணவர்களுக்கான மலசல கூடமும் அமைக்கப்பட்டன. இவரது காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, இணை பாடவிதானச் செயற்பாடுகள், தமிழ்தினப் போட்டி, இல்ல மெய்வல்லுனர், போட்டிபோன்ற சகல செயற்பாடுகளிலும் மெச்சக் கூடிய விதமாக் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. 2001ஆம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டியில் நான்கு நிகழ்ச்சிகளில் கோட்டத்தில் தெரிவாகி வலயமட்டத்தில் பங்கு பற்றினார்கள்.


2012ஆம் ஆண்டு புதிய வகுப்பறை கட்டப்பட்டு 19.09.2002 இல் திறப்புவிழாவும் நடைபெற்றது. 30.10.2002 இல் பாடசாலை நூற்றாண்டு விழா அதிபர் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 2002 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 2005இல் மின்னிணைப்பு வழங்கப்பட்டது. 17.10.2005 இல் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 2006இல் தரம் - 10 வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2007இல் முதற்தடவையாக 11 மாணவர்கள் G,C,E,(O/L) பரீட்சைக்குத் தோற்றி 4 மாணவர்கள் உயர்தர வகுப்புக்கு தகுதி பெற்றனர்.

01/07/2009 இல் திருமதி.வ.கதிரேசுப்பிள்ளை புதிய அதிபராகவும் பதவியேற்றார். தொடர்ந்து பாடசாலையில் கல்வித்தர வளர்ச்சியிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் மென்மேலும் வளர்ச்சி காணக்கூடியதாக இருக்கிறது. 2010இல் தமிழ்த்தினப் போட்டியில் தரம் - 11ஜ சேர்ந்த மாணவன் கோட்டமட்டம், வலயமட்டத்தில் 1ஆம் இடம் பெற்று மாவட்ட மட்டப்போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்றார். 2010ஆம் ஆண்டு அதிபரின் முயற்சியினால் பாடசாலை முழுவதும் வர்ணம் பூசப்பட்டது. கிணற்றுக்கு மூடி இடப்பட்டது. சமூக விஞ்ஞானப் போட்டியில் தரம் 8,10 வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் 2ஆம்,1ஆம் இடங்களைப் பெற்று மாகாணமட்டப்போட்டிகளில் பங்கு பற்றி சாதனை புரிந்தனர். பாடசாலை முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பது கண் கூடாகத் தெரிகிறது.

2011ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ச.கனிஸ்வரன், மு.சோபன் தாஸ் ஆகிய இருமாணவர்கள் உயர்புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். தற்போது யா/இந்துக்கல்லூரியில் கல்வி பயில்கிறார்கள். 2011இல் செல்வன்.ப.சுதர்ஷன் க.பொ.த(சா/த) பரீட்சையில் 6ஏ, 2சி என்ற பெறுபேற்றைப் பெற்று யா/இந்துக்கல்லூரியில் வர்த்தகப்பிரிவில் கல்வி கற்கிறார்.

2012இல் புதிதாக சமையலறை அமைக்கப்பட்டு அதில் சிறப்பாக மாணவர்களுக்கான மதிய உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. வருடா வருடம் யா/இந்துக் கல்லூரி மைதானத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறபபாக நடைபெற்று வருகிறது.

20147இல் கோட்டமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு - 2 வாசிப்பில் இரண்டாம் இடமும், மத்திய பிரிவு பேச்சுப்போட்டியில் 2ஆம் இடமும், திறந்த போட்டி தமிழறிவு வினாடிவினாவில் 3ஆம் இடமும் கிடைத்தது 2014 - சமூகவிஞ்ஞான பொது அறிவுப்போட்டியில் தரம் - 9இல் கோட்ட மட்டம் 2ஆம் இடமும் தரம் -10 இல் கோட்டமட்டம் 2ஆம் இடமும், வலயமட்டம் 2ஆம் இடமும், தரம் -11 இல் கோட்ட மட்டம் 2ஆம் இடமும், 3ஆம் இடமும் கிடைத்தது .இவ்வாறாக பாடசாலை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட்டு வருகிறது.





பாடசாலை மாணவ மாணவிகள்



பாடசாலை ஆசிரியர் குழாம்



உடற்பயிற்சிப்பிரிவுடன் அதிபர், ஆசிரியர்கள், விருந்தினர்கள்

# நடைபாதை வியாபாரத்தால் உள்ளூர் வர்த்தகர்கள் பாதிப்பு

## அகற்றுமாறு வர்த்தக சங்கத்தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து வியாபாரத்தை மேற்கொள்ளும் நடைபாதை வியாபாரிகளை உடன் அகற்றுமாறு வலி.தெற்கு பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் லயன் சிஹறிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலி.தெற்கு பிரதேச வர்த்தகர்கள் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் பிரதேசசபை மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட அவர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பிரதேசத்தின் வர்த்தகர்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். தென்பகுதிகளில் இருந்து இங்கு வந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளால் எமது வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இலட்சக் கணக்கில் முதலிட்டு பிரதேச சபையில் வருடா வருடம் முறையாக வியாபார அனுமதி பெற்று உரிய முறையில் இவர்கள் வியாபாரத்தை நடாத்துகின்றார்கள். ஆனால் தென்னிலங்கையில் இருந்து வருகைதரும் வியாபாரிகள் பிரதேச சபையிடம் வியாபார அனுமதி பெறாது பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் உடுபுடவைகளையும் இலத்திரணியல் பொருள்களையும் அழகுசாதன பொருள்களையும் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றார்கள். இதனால் பெரும் முதலீடு செய்த எமது வியாபாரிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாக குரல் கொடுப்பதற்கு பிரதேசத்தில் வர்த்தகர் சங்கம் இல்லாதமை பெரும் குறையாகக் காணப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் வியாபார நிலையங்களில் பலவற்றில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் இவை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. வர்த்தகர் சங்கத்தின் ஒருங்கமைந்த செயறபாட்டினூடாக வர்த்தகர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். எனத் தெரிவித்தார். (63)

## மொழிபெயர்ப்பாளராக திவ்வியநாதன் தெரிவு

யாழ்ப்பாணம் அல்வாயைச் சேர்ந்த வீரசிங்கம் திவ்யநாதன் அண்மையில் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## இறந்த சிறுமிகளின் குடும்பங்களுக்கு மரணச் செலவு கொடுப்பனவு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள செல்வாநகர் குளத்தில் கடந்த 30 ஆம் திகதி குளிக்கச் சென்றபோது இறந்த 3 சிறுமிகளதும் குடும்பங்களுக்கு மரணச் செலவுக் கொடுப்பனவாக தலா 15000 ரூபா அனர்த்த முகாமைத்துவ அமைச்சிலிருந்து பெறறுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் க.சுகுணதாஸ் இதற்கான நடவடிக்கையைமேற்கொண்டுள்ளதாகவும்,

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்,மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அனர்த்தங்கள் நிகழும் போது மரணச் செலவுக் கொடுப்பனவாக பணம் வழங்கப்படும் வழமைக்கமைய இவர்களுக்கும் மரணச் செலவுக் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

## வெள்ளி நற்சிந்தனை...



# ஆதிகவி வால்மீகி

முன்னொரு காலத்தில் ரத்னாகரன் என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவன் பிழையான நட்பினால திருடன் ஆகிவிட்டான். காட்டில் ஒளிந்து கொண்டு அந்த வழியாக வருபவர்களைக் கொன்று பொருட்களை அபகரித்து தன்னுடைய குடும்பத்தைக் காபபாற்றி வந்தான்.

ஒருதடவை தேவரிஷியாகிய நாரதர் அந்தப் பக்கமாக வந்தார். வழக்கம் போல கத்தியுடன் அவரைக் கொலை செய்யச் சென்றான். "நீ எதற்காக என்னைக் கொல்ல வருகிறாய்? நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? என்றார். நாரதர் எனது குடும்பம் வாழ பொருள் வேண்டும் அதற்காக கொலை செய்து உடமைகளைத் திருடுகிறேன் என்றான் ரத்னாகரன்

மனிதர்களைக் கொல்லாமல் காய்கிழங்குகளை உண்டு நீ வாழ்க்கை நடாத்துமுடியாதா? நான் காய கிழங்குகளைச் சாப்பிடலாம். ஆனால் என் பெற்றோர் என் மனைவி, என் பிள்ளைகள் இவர்களால் காய கிழங்குகளைச் சாப்பிடமுடியுமா?

நீ, யாருக்காக இப்படி மனிதர்களைக் கொல்லும் பாவத்தைச் செய்கிறாயோ? அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்ளப்போகிறார்களா? உன் பாவத்தை நீதான் அனுபவிக்க வேண்டும் தெரிந்ததா? என்றார் நாரதர்

"இது எப்படி நியாயம் ஆகும் என் பாவத்தினால கிடைக்கும் பொருள்களைக் கொண்டு யார் வாழ்க்கை நடாத்துகிறார்களோ அவர்கள் என் பாவத்தில் ஒரு பங்கை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?"

"அப்படியில்லை! உன் பாவத்தில் யாரும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். உனக்கு சந்தேகமாக இருந்தால் என்னை இந்த மரா மரத்தில் கட்டிவிட்டு வீட்டிற்குப்போய் கேட்டு விட்டு வா" என்றார். நாரதர்

வீட்டிற்குச் சென்று தன் குடும்பத்தினரிடம் "நான தினமும் பாவச் செயல்களைச் செய்துதான உங்களைக் காப்பாற்றி வருகிறேன் அந்தப்பாவத்தில் உங்களுக்குப் பங்கு உண்டா, இல்லையா?" என்று கேட்டான்.

குடும்பத்தினர் அனைவரும் எங்களைக் காப்பது உனது கடமை அதற்காக நீ எவ்வழியைப் பயனபடுத்தினாலும் அதனால் விளையும் நன்மை தீமை எம்மைச் சாராது அது உனக்கு மட்டும் உரியது எனவே பாவங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று ஒரே மாதிரியாகச் சொல்லி விட்டார்கள்.

இவர்கள் சொன்ன பதில்களைக் கேட்ட ரத்னாகரனுக்கு ஞானோதயம் பிறந்தது நாரதரிடம், என் பாவங்களுக்கு ஒரு பிராய்ச்சித்தம் சொல்ல வேண்டும் என்று கேட்டான் நாரதர், உன் பாவம் நீங்க ராமநாமம் சொல்லுமாறு கூறினார் ஆனால அவனால் "ராம" என்ற நாமத்தைச் சரியாகச் சொல்ல முடியவில்லை எனவே நாரதர் தன்னைக்கட்டி வைத்த மரத்தின் பெயரான மராவை "மரா" என்று உச்சரித்துக் கொண்டிருக்குமாறு கூறினார்.

ரத்னாகரன் அம்மரத்தடியில் இருந்தவாறு 'மரா, மரா' என்று ஜபம் செய்யத்தொடங்கினான். நாளடைவில் அது 'ராம, ராம' என்று மாறிற்று அவனைச்சுற்றி புற்று உண்டாகுமளவுக்கு நீண்டகாலம ராம நாமம் உச்சரித்தான்.

அவன் தவத்தை மெச்சி பிரம்மா வரம் கொடுத்து வடமொழியில் புற்றை வால்மீகம் என்று அழைப்பார்கள் எனவே வால்மீகத்திலிருந்து வெளிப்பட்ட அவர் 'வால்மீகி' என்று அழைக்கப்பட்டார்.

அந்த வால்மீகிதான் ஆதிகவியாகி அழியாப் புகழ்பெற்ற இராமாயணக் காவியத்ஜதை இயற்றினார்.

**சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

ஆர்ஜென்டீன எழுத்தாளர் ஜோர்ஜ் லூயி போர்ஹே'யின் நேர்முகம் ஒன்றில் இதுவரை இலக்கியத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்களில் எது மிகச் சிறந்தது என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் சற்றும் யோசிக்காமல் சொன்ன பதில்: வாசகன். அது உண்மையும்கூட. வாசகன் என்பவன எப்படியிருப்பான், அவனுக்கு என்ன தெரிந்திருக்கும், எந்த அளவு அவனது அறிவும் வாசிக்கும் திறனும் உள்ளது என்பதைப் பற்றி எந்த முடிவான வரையறையும் கிடையாது.

ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படியே வாசகன் என்ற சித்திரத்தை உருவாக்கிக் கொள்கிறோம். அந்த வகையில் புத்தகம் என்ற ஒன்று தோன்றிய நாளில் அதற்கு ஒரு வாசகன் தோன்றியிருப்பான். அவனுக்கும் இந்தப் புத்தகத்தை வாசிக்கும் வாசகனுக்கும் இடையில் காலமாற்றம் நடந்திருக்கிறதேயன்றி வாசகன் என்ற இருப்பு மாறவேயில்லை.

வாசகன் துப்பறிவாளனை விடவும் தீவிர தேடுதல் கொண்டவன். அவன் படைப்பின் ஊடாக ஒரு கண்டுபிடித்தலை நிகழ்த்துகிறான். அந்தக் கண்டுபிடிப்பு என்னவென்று அவன் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதில்லை. மாறாக அவன் ஒவ்வொரு சொல்லையும் வாக்கியத்தையும் உலகின் பல்வேறு கண்ணிகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறான்.

ஒரு புதிரை அவிழ்ப்பது போல உலகோடு உள்ள தனது உறவை புத்தகங்களின் வழியே கடந்துசெல்ல முயற்சிக்கிறான். பரிசீலனை செய்கிறான். அவ்வகையில் வாசகன் ஒரு ரகசியச் செயல்பாட்டாளனாகவே இருக்கிறான். வாசிப்பு என்ற செயல்பாடு உலகின் புராதன செயல்பாடுகளில் ஒன்று. அது ஏற்படுத்தும் விளைவுகள் இன்றுவரை முழுமையாகக் கண்டறியப் படவேயில்லை. – **எஸ்.ராமகிருஷ்ணன்**

மகிழ்வுடன் இருக்க தினமும் குறிப்பிட்டளவு இலக்கியத்தை நான் உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வகையில் தினமும் தேக்கரண்டியளவு மருந்து உட்கொள்ளும் நோயாளிக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை. என்னளவில் இலக்கியம் ஒரு மருந்து. – **ஓரன் பாமுக்**

மனிதன் அனுபவிக்கக் கிடைத்த எத்தனையோ இன்பங்களில் வாசிப்பு இன்பம் மேலானது. எவ்வளவு வாசித்தாலும் தெவிட்டுவதில்லை. ஒன்றுக்குப் பின் ஒன்றாக பிரமிக்க வைக்கும் புத்தகங்கள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன... புத்தகத்தில் உண்மையான பற்று வைக்கும் ஒருவருக்கு வேறு பற்று இருக்காது. ஆயிரம் புத்தகம் படித்தால் ஆயிரத்தியோராவது புத்தகத்தில் வியப்பதற்கு விசயம் குறைந்துகொண்டே வரும். எனக்கோ வியப்பு கூடிக்கொண்டு வருகிறது. இது பொது விதியாக இருக்க முடியாது, எனக்கு மட்டும் சம்பவிக்கிறது என்றே நினைக்கிறேன். ஒருவேளை அனுபவம் கூடக் கூட நல்ல புத்தகங்களைப் படிப்பதற்குத் தெரிவு செய்யும் திறமை என்னிடம் அதிகமாகியிருக்கலாம். முன்னெப்போதும் இல்லாத மாதிரி தரமான புத்தகங்களின் வருகையும் அதிகமாகியிருக்கிறது. அவை தரும் வாசிப்பு இன்பமும் கூடுகிறது. அருமையான சொற்றொடர்கள் வரும்போது, 'அட, இது எனக்குத் தோன்றாமல் போயிற்றே' என்று என்னையறியாமல் தலையில் அடிப்பதும் அதிகமாகிறது. என்னுடைய எஞ்சிய வாழ்நாள் மட்டும் குறைந்து கொண்டே வருகிறது. – **அ. முத்துலிங்கம்**

வாசிப்பதும் எழுதுவதும் ஒரு கலைதான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதற்காக செருக்கும் திமிருமாக இருக்க வேண்டியதில்லை. படைப்பாளனுக்குத் திமிர் அவசியம் என்றும் படைப்பவனின் கர்வம் பெருமையுடைத்து என்றெல்லாம் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். ஒரு மண்ணும் இல்லை. தறி ஓட்டுபவனும், வயல் உழுபவனும் எந்தவிதத்திலும் கேவலமானவன் இல்லை. காலங்காலமாக சேற்றுக்குள் உழலும் அவனுக்குத்தான் எந்தப் பயிர் எந்தப் பருவத்தில் விளையும் என்று தெரியும். அவனது துறையில் அவன் கொண்டிருக்கும் அறிவில் ஐந்து சதவீதம் கூட நம்மிடம் இல்லை என்பதுதானே உண்மை?

எழுத்தும் வாசிப்பும்தான் அறிவின் இலக்கணம் என்று இங்கு நிறையப் பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்– மண்டை நிறைய கனத்தோடு. ஆனால் வாசிப்பதும் எழுதுவதும் எந்தவிதத்திலும் பிறவற்றைவிட சிறப்பு வாய்ந்ததில்லை. வாசிக்கிறவன் தான் அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருந்தால் நாம்தான் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

அவனவன் துறையில் அவனவன் கில்லி. அவன் வாசிக்காவிட்டாலும் கூட கில்லிதான். – **வா.மணிகண்டன்**





தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய பூங்காவனத் திருவிழாவான நேற்றுமுன்தினம் யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து சந்நிதி வீதியூடாக நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுமுகமாக தூக்குக்காவடி, பாற்செம்பு போன்றன சந்நிதி கோவிலை நோக்கிச் சென்றதனைக் காணலாம். (85)

# நாய்களுக்கு நீர்வெறுப்புநோய் தடுப்பூசி ஏற்றல்

(வவுனியா)


வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை சுகாதார திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

வவுனியாவின் பல பகுதிகளிலும் மேற் கொள்ளப்பட்டு வரும இச் செயற்பாட்டில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு முதற்கட்ட மாக இத்தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வவுனியா வடக்கில் நேற்று முன்தினம் நாய்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றபட்டன.

அடுத்த கட்டமாக வீதியோர நாய்களுக்கும் இத்தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பரமர் சங்கமம்



"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" எண்டு எந்தப் புண்ணியவான் சொல்லி வைச்சானோ இந்தக் காலங்களில் திருமணங்கள் எங்கை எங்கையெப்படி எப்படி யெல்லாம் நடக்கிறேண்டதை அறிஞ்சா அந்தப்புண்ணிய வானின் வாயில சக்கரை மட்டும் போட்டால் போதா பாருங்கோ ... ரெண்டு பவுணில சங்கிலியும் போடவேணும்!

ஏனெண்டா ஆகஸ்ட் 20ஆம் திகதி தமிழக விசேடதடுப்பு முகாமில் 2011ஆம் ஆண்டு போலி ஆவணங்களில் இந்தியாவுக்குப் போனதால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் இளைஞன் மூண்டுமாத சுற்றுலாவில் இந்தியாவுக்குத் தருவிக்கப்பட்ட யுவதியைத் திருமணம் செய்துகொண்ட புதினத் தைப் பேப்பரில் பாத்ததும் இந்த எண்ணந்தான் பரமருக்கு வந்தது.

இதுமட்டுமே நடந்திருக்கு! இதெண்டான்ன அவனுக்கு உறவுக்காரப் பொடியனாம் எத்தினை பொம்புளைப் பிள்ளை யள் பொறினுக்குப் பொம்பளையா அனுப்பப்படுகினம். ஆளை யாளைக்கண்டும் பழகியும் இராத முகமறியா மாப்புளையைத் தேடிப்போன பொம்புளையள் ஏமாந்த எத்தினையோ கதையளைக் கேள்விப்பட்டிருக்கிறம்.

திருமணமாப்புளை பொம்புளை இல்லாமல் இஞ்சை எங்களுக்கு அங்கைகல்யாணம் நடக்கிற நாளேல கல்யாணப் சாப்பாடும் போட்டிருக்கினம். திண்ட சாப்பாடு செமிக்க முன் னால பொம்புளை தனிய ஊருக்குத் திரும்பி இருக்கும் என் னெண்டா அவருக்கு முதலிலேயே வெள்ளைத்தோல் பொம்புளை மனைவியாகவும் பிள்ளைகள் ரெண்டும் இருக்கும்.

வீட்டுவேலைக்காரிக்காகவும் இஞ்சையுள்ள தாய் தேப்பன், சகோதரங்களைத் திருப்திப்படுத்தவுந்தான் இந்த ஏற்பாடு களை வெளிநாடு தஞ்சம் புகுந்த எங்கட நாட்டு மாப்புளை செய்திருப்பார். இதுபோல எத்தனையோ நடந்திட்டுது. இன்னும் நடந்து கொண்டிருக்கு


இன்னும் சில கலியாணங்கள் பொம்புளையை இஞ்சை இருந்து இந்தியாவுக்கு விசா எடுத்துக் கூட்டிப்போக மாப்புளை அங்கை சுற்றுலா விசாவில் வந்து திருமணத்தைச் செய்து மூண்டு மாதத்தேனிலவுடன் பொம்புளை இஞ்சை வர மாப்புளை பொறினுக்குப்போய் விடுவார். மாப்புளை அலுவல் பாத்துதான் பொம்பிளையை எடுக்க வேணும். அதுவரை இஞ்சைவந்த பொம்புளை தேன்நிலவுக்கனவோடை இலவு காத்துக் கொண்டிருப்பதுதான் நடக்கும்.

அண்டைக்கு இந்தியாவில் நடந்த கல்யாணத்திலும் சடங்கு சம்பிரதாயங்கள் முடியப்பொம்புளை சென்னை, பல்லா வாரத்தில் உள்ள உறவினர் வீடு சென்று விட்டாராம். மாப்பு ளையைத் தினமும் மு.ப 10 மணிக்கும், மாலை 5 மணிக்கும் இடைப்பட்ட நேரங்களில் விசேட தடுப்பு முகாமுக்கு பொம்புளை போய்ச் சந்திக்கவும் அனுமதிக்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தி கூறுது.

இப்படியெல்லாம் அலைஞ்ச உலைஞ்சு ஏறியிறங்கி செய்யிற கல்யாணங்கள் சொர்க்கத்திலா நிச்சயிக்கப்படுகின்றன. எனக் கெண்டா இதேதோ நரகத்தில் நிச்சயிக்கப் படுவதாகத்தான் படுகிது சொல்லுங்கோ பார்ப்பம்.....

# வடக்கில் மக்கள் நலத்திட்டங்களை மத்திய அரசாங்கமே செயற்படுத்தி வருகிறது

– பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு –



அரசாங்கம் பாகுபாடு எதுவும் இன்றி அனைத்து வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. வடக்கு மாகாணசபை அதிகாரத்திற்கு வந்த பின்னரும் கூட வடக்கிலும் மத்திய அரசாங்கமே மக்கள் நலனில் அக்கறை கொண்டு மக்கள் நலத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப் பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ், 'உதவும் கரங்கள்' வாழ்வாதாரக் கடன வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இந் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகிறது. அதன் ஒரு செயற்பாடகவே இக்கடன் வழங்கும் திட்டம். இக்கடன் ஒரு 'வருடத்திற்கு கருணைக் காலமாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தின் மூலம் பயனாளிகள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக இலகுவான வழி சமைத்து கொடுக்கப்பட்டுள் ளது என்றார்.

இந்நாட்டில் நான்கு வகையான ஆட்சி முறைமைகளை மக்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள். உள்ளூராட்சி, மாகாண சபை, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதி போன்ற ஆட்சி முறைமைகள். இதில் வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சியும், மாகாண சபையும் மக்கள் நலத்திட்டங்களை வகுத்து செயற்படுகிறார்களா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாகாணசபை மூலம் வறுமையை ஒழிப்பதற்கான பல்வேறு நலத்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முடியும். அல்லது அதற்கான வழி முறைகளை அமைத்துக் கொடுக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செயற்படவில்லை. மாகாணசபை ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைகின்றது. மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் வடக்கு மாகாணசபை அதிகாரத்திற்கு வந்த பின்னரும் வடக்கிலும் மத்திய அரசாங்கமே மக்கள் நலனில் அக்கறை கொண்டு இவ்வாறான மக்கள் நலத்திட்டங்களைச செயற்படுத்தி வருகிறது எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், பருத்தித்துறை நகராட்சி மன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் மார்க்குவனுவல், வல்வெட்டித் துறை நகராட்சி மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திருமதி இந்திரன் கைலாஜினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# "கித்துளக வருண - 2014" விற்பனையும் கண்காட்சியும்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சானது கண்டி மாவட்டத்தில் கித்துள் உற்பத்திப் பொருட்களைப் பிரபல்யப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் கண்டி சிற்றி சென்ரா வளாகத்தில் இன்று முதல் 7ஆம் திகதி வரையில் 'கித்துளக வருண' கண்காட்சியையும் விற்பனைச் சந்தையையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இக்கண்காட்சி மூன்று நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொது மக்களின் பார்வைக்கும் விற்பனைக்கும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். இதற்கு நுழைவுக்கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. இந்த 3 நாட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சானது தனது அமுலாக்கல் நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலிலும் தலைமைத்துவதத்திலும் இடம் பெறும் இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சா மகிந்தானந்த அளுத்கமகே, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம, கண்டி மாநகர முதல்வர் மகேந்தரத்வத்தை மாவட்டத்தின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர்.

இக்கண்காட்சியில் தரம்வாய்ந்த கித்துள் உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதற்காகவும் கித்துள் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக சந்தைப்படுத்துவதற்காகவும் 20 காட்சிக்கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றார்.

* கீழே தரப்பட்ட தகவலை அவதானித்து விடை தருக.

KRTBCDCBKTPPZZRKKKTGGRNNBRKKK

18. இங்கு K என்ற எழுத்து எத்தனை தடவை வந்துள்ளது.

(i) 9 (ii) 8 (iii) 7

19. இங்கு 4 தடவை வந்துள்ள எழுத்து எது?


(i) B (ii) T (iii) R

20. இங்கு குறைந்த தடவை வந்துள்ள எழுத்து எது?


(i) D (ii) C (iii) Z

* படத்தில் காட்டியவாறு வெட்டி அகற்றிய இடத்தில் வர வேண்டிய அமைப்பு எது?

21. (i) (ii) (iii) (iv)




22. (i) (ii) (iii) (iv)



* வித்தியாசமான படத்தின் கீழ் கோடிடுக.

23. (i) (ii) (iii) (iv) (v)



இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை சனிக்கிழமை வெளிவரும்



## தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I

1.30 மணி

# கல்வி முரசு




* ஒத்த பட ஜோடியின் கீழ் கோடிடுக.

01. (i) (ii) (iii) (iv) (v)



02. (i) (ii) (iii) (iv) (v)



* ஆரம்பத்தில் உள்ள படத்தை உருவாக்கும் படக் கூட்டம் எது.

03. (i) (ii) (iii) (iv)




04. (i) (ii) (iii) (iv)




* வேறுபட்ட படக் கூட்டத்தின் கீழ் கோடிடுக.

05. (i) (ii) (iii)




06. (i) (ii) (iii)




* ஆரம்பத்தில் காட்டியவாறு கடதாசியை மடித்து வெட்டி பிரிக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?


07. (i) (ii) (iii)




08. (i) (ii) (iii)



09. (i) (ii) (iii)



* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.



5kg 5kg 6kg

10. வட்டக்காய் 2 இனதும் அன்னாசி 2 இனதும் நிறை யாது?

(i) 8 kg (ii) 9 kg (iii) 10 kg



11. பப்பாசி 1 இனதும் வட்டக்காய் 3 இனதும் நிறை யாது?


(i) 10 kg (ii) 12 kg (iii) 9 kg

12. அன்னாசி 3 இனதும் பப்பாசி 1இனதும் நிறை யாது?


(i) 7 kg (ii) 6 kg (iii) 9 kg

* வித்தியாசமான படத்தின் கீழ் கோடிடுக.


13. (i) (ii) (iii) (iv)



14. (i) (ii) (iii) (iv)



15. ஆரம்பத்தில் தரப்பட்ட உருவை ஒத்த உரு எது?



(i) (ii) (iii)

* தரப்பட்ட தகவலை நன்கு அவதானித்து விடை தருக.

16. [7486] → [4768] எனின் [1324] → [------]


(i) 3142 (ii) 2134 (iii) 3124

17. [4528] → [5482] எனின் [7936] → [------]

(i) 9763 (ii) 6793 (iii) 3976

# பளையில் சொந்த காணியற்றவர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(பளை)

நாம் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அறிந்து தீர்வுகளை கண்டு வருகின்றோம். பளை பிரதேசத்தில் சொந்த காணிகள் இன்றி வாழ்ந்து வரும் நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்குள் சொந்தமாக காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.ஏன ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் தம்பகாமத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியம் உரிமை நிலம் என்றெல்லாம் பேசுகின்றவர்களுக்கு இருபது, முப்பது வருடங்களாக சொந்தமாக ஒரு துண்டு காணியின்றி வாழ்பவர்களைக் கண்ணுக்குத் தெரியவில்லை.

இவர்களால் இந்த ஏழை மககளுக்கு ஒரு துண்டு நிலத்தையேனும் சொந்தமாக பெற்றுக் கொடுக்க முடியவில்லை. மாறாக இந்த மக்களுக்கு எதிராக, இந்த மக்களுக்கு ஒரு துண்டு காணி சொந்தமாக கிடைத்து விடக்கூடாது எனும் நோக்கில் அறிக்கைகளையும், கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றார்கள்

ஆனால் நாங்கள் இந்த பிரதேசங்களில் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அறிந்து தீர்வுகளை கண்டு வருகின்றோம் பளை பிரதேசத்தில் சொந்த காணிகள் இன்றி வாழ்ந்து வரும் நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்குள் சொந்தமாக காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் தொடர்ச்சியாக வீட்டுத்திட்டம் உள்ளிட்ட ஏனைய அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் கார்த்திக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பளை பிரதேச சபை உறுப்பினர் இராசதுரை, பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் சமூகசேவையாளர் தர்மலிங்கம், வண்ணாங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவாஜி, தம்பகாமம் விளையாட்டுக் கழகத்தினர் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொது வைத்தியசாலையில் நடமாடும் மருத்துவ சேவையும் 5 இலட்சம் ரூபா மருந்து பொருட்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.பிரிந்தாகரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழவில் சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரஸ்ரீ கஜதீர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு 5 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி மல்லாவி அரபாத்திடம் கையளித்து நடமாடும் வைத்திய சேவையினையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யுனேஸ் பாறுக் ஜெனறைட்ரர் அறை புனரமைப்புக்கு 30000 ரூபா காசோலையும் வழங்கியுள்ளார்.

இவ் நடமாடும் சேவையில் கண் வெளி நோயாளர் மருத்துவம் அங்கவீனமனோருக்கான மருத்துவம் இரத்ததானம் போன்ற மருத்துவ சேவைகளும் இடம் பெற்றுள்ளன.


இதற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் சந்திரஸ்ரீ கஜதீர முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் பிரதேச செயலாளர்கள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யுனேஸ் பாறூக் ஆகியோர் கலந்து கொண்டனர். (40)

# நன்னீரூற்று கண்டுபிடிப்பு

யாழ். சிறுத்தீவில் நன்னீரூற்று கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிறுத்தீவில் .உல்லாச விடுதியை நிர்மாணித்துக்கொண்டிருக்கும் சீன நிறுவனம் பெரிய பிரயத்தனங்கள் மேற்கொண்டு நன்னீரூற்றைக் கண்டறிந்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சிறுத்தீவு, புனித லூர்த்து அன்னை ஹெவியை அண்டிய பிரதேசங்களில் உல்லாச விடுதிகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் அவ் விடுதிகளுக்கான அத்திபாரங்களை பூர்த்தி செய்துள்ளதாகவும் மூன்று ஆண்டுகளில் கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தி அடையுமென்றும் தெரிவித்துள்ளது. (08)


வாழ்க வளமுடன்



பெயர் :ஜெ.சிந்துஜன்
முகவரி: 39, 5ஆம் குறுக்கு
கொழும்புத்துறை.
அகவை
9
இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ................................
முகவரி :- ................................
பிறந்த ஆண்டு :- ................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
................................
பெற்றோர் கையொப்பம்


# உப்புக்கிணற்றடி விநாயகருக்கு வருடாந்த மஹோற்சவம்

(கொலிகண்டி)

பொலிகண்டி இலுப்பை மூலை உப்புக்கிணற்றடி அருள் மிகு சித்திவிநாயகப்பெருமான் ஆலய மஹோற்சவம் கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக் கிழமை வேட்டைத்திருவிழாவும், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை சப்பறத்திரு விழாவும் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம் பெறவுள்ளன. வியாழக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவுடன் மஹோற்சவம் பூர்த்தியாகவுள்ளது.

மேற்படி விசேட திருவிழாக்கள் தவிர்நது எனைய உற்சவதினங்களில காலை உற்சவ பூஜைகள் 0.6.30 மணிக்கு உதயசாந்தி பூசையும் 08 மணிகKு அபிசேக பூசையும் முற்பகல் 09 மணிக்குயாக பூசையும் முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டப பூசையும் முற்பகல் 11 மணிக்கு தம்பப்பூசை யினைத்தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை மஹோற்சவ காலங்களில் மதியம் ஆலய சூழலின் முன்றலிலுள்ள அமுதசுரபி மடத்தில் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றுவரு வதுடன் இரவு விநாயகப்பெருமான் வீதியுலா வந்ததும் ஆன்மீக நற்சிந்தனைகளை மேலோங்கச்செய்யும் பொருட்டு பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் தெய்வீக சொற்பொழிவும் இடம்பெற்று வருகின்றது. (116)





இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் நிர்மாணிக்கப்பட்ட 3 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். இந்திய பிரதி துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி வீட்டைத் திறந்து வைப்பதையும், வீட்டிற்கு முன்னால் மரக்கன்று நாட்டி வைப்பதையும் காணலாம்.

# சர்வதேசத்திற்கு சாவாலாகவுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். ஒழித்துக்கட்டப்படும்

## பராக் ஒபாமா சூளுரை



சமகாலத்தில் கொடூர தீவிர வாத அமைப்பாக உருவெடுத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை ஒழித்துக் கட்டப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சூளுரைத்துள்ளார்.

ஈராக்கின் சில பகுதிகளையும், சிரியாவில் கைப்பற்றப்பட்ட பகுதியையும் ஒருங்கிணைத்து இஸ்லாமிய நாடு என்று பிரகடனப்படுத்திய தீவிரவாதிகள், அதனை விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீட்க குர்திஷ்படையினர் போராடி வருகின்றனர். அதற்கு உதவும் வகையில் அமெரிக்கா தாக்குதல் நடாத்தி வருகிறது.

இதனால் ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் அமெரிக்காவை சேர்ந்த பத்திரிக்கையாளர்களான ஸ்ரீவன் ஸ்கொட்லாப் (Steven Scotlaff) மற்றும் ஜேம்ஸ போலே (Jmaes Polo) ஆகியோரை சிறைப்பிடித்திருந்த நிலையில், அவர்களை சிரச்சேதம் செய்து கொலை செய்துள்ளனர். ஸ்கொட்லாப்பின் தலையை துண்டித்த தீவிரவாதி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை எச்சரிக்கும் தொனியில் பேசியிருந்தார்.

இந்நிலையில் ஸ்கொட்லாப் கொல்லப்பட்ட காணொளியை ஆய்வு செய்த அமெரிக்க தடவியல் துறை அதிகாரிகள் அது உண்மையானது தான் என தெரிவித்தனர். இதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, எங்கள் நாட்டை சேர்ந்த இரு நல்ல இளைஞர்களைக் கொன்றதற்காக மட்டும் ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க முடிவெடுக்கவில்லை. ஒட்டுமொத்த அமெரிக்க பிராந்தியத்துக்கும், ஈராக் நாட்டிற்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ள அவர்களை அழிக்க வேண்டியது உலக நன்மைக்கு நல்லது என்று கூறியுள்ளார். தீவிரவாதிகள் எங்களை அச்சுறுத்தலாம் என்று நினைத்தால் தோற்றுப்போவார்கள்.

மேலும், அச்சுறுத்தல் வரும் போது தான் எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பார்கள். எனவே தீவிரவாதிகளை ஒழிப்பது உறுதி என ஒபாமா தெரிவித்துள்ளார்.

# இராட்சத கைகளுடன் வாழும் தாய்லாந்துப் பெண்மணி



தாய்லாந்து நாட்டில் பெண் ஒருவர் உலகிலேயே மிகப்பெரிய கைகளுடன் வாழ்ந்து வருவது மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்தின் சூரின் (Surin) மாகாணத்தை சேர்ந்த சமக்சாமாம் (Samaksamam age- 59) என்ற பெண் சுமார் 50 வருடங்களாக மிகப பெரிய கைகளை வைத்து கொண்டு அவதிப்பட்டு வந்துள்ளார். இவர் கைகளை அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருடைய கை 9.50 கிலோ என்பதால், எந்தவிதமான வேலைகளையும் செய்ய முடியாமல் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார். ஆனால் தற்போது தனது வயதான பெற்றோர்களை பார்த்து கொள்வதற்காக இவர் வெளியுலகிற்கு வந்து ஒரு மளிகைக் கடை வைத்துள்ளார். இந்த நோய்க்காக, சிறு வயதிலிருந்து பல சிகிச்சைகள் எடுத்தும் ஒன்றும் பலனளிக்கவில்லை. இதற்கான ஒரே வழி இவரின் கையை துண்டிப்பது தான் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


உலகச் செய்திகள்

# ரஷ்யா -உக்ரைன் சண்டை நிறுத்தம்

உக்ரைன் கிழக்கு பகுதியில், உக்ரைன் மற்றும் ரஷ்யா நேற்று முன்தினம் சண்டை நிறுத்தத்தை அறிவித்துள்ளன. இதை, உக்ரைன் அதிபர், பெட்ரோ பொரோஷென்கோ அறிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான எஸ்டோனியாவில் "நேட்டோ" எனப்படும் வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பு நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.


கடந்த ஏப்ரல் முதல், உக்ரைனின் கிழக்கு பகுதியில் சண்டையிட்டு வரும் ரஷ்யா ஆதரவு பிரிவினை வாதிகளும், அவர்களுக்கு எதிராக போராடி வரும் உக்ரைன் படைகளும் சண்டை நிறுத்தத்தை மே கொண் ள்ளதாகவும், இதற்கான உடன்படிக்கையில், ரஷ்ய அதிப புடின் கையெழுத்திட்டுள்ளதாகவும், உக்ரைன் அதிபர் அறி ர். கடந்த ஏப்ரல் முதல் நடைபெறும் இந்த மோதலில், 2,6 ர் கொல்லப்பட்டுள்ளனர் 3.40 இலட்சம் பேர் தங்கள் வீடுகளை ட்டு வெளியேறியுள்ளனர்.



அமெரிக்க வந்த நெதர்லாந்து மன்னர் வில்லியம் அலெக்ஸாண்டர், ஐயோவா மாகாண ஆளுநர் டெர்ரி பிரான்ஸ்டரை சந்தித்தார்.

# உலகை உலுக்கும் எபோலா இதுவரை 1900 பேர் பலி

## உலக சுகாதார நிறுவனம் தகவல்




(ஜெனீவா)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் நோய் தாக்கி பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந் நோய்க்கு இதுவரை 1900 பேர் பலியாகியுள்ளனர்.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் நேற்று முன்தினம் ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடாத்தியதில் உலக சுகாதார நிறுவனத் தலைவர் மார் க்ரெட்ஷான் கூறியதாவது,

ஆபிரிக்க நாடுகளை எபோலா நோய் தாக்கி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தாலும் தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப பட்டுள்ளது. இந்த நோயை முற்றிலும் ஒழிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எபோலா நோய்க்கு இதுவரை 1900 பேர் பலியாகியுள்ளனர்.3ஆயிரத்து 500 பேர் நோயால பாதிக்கப்பட்டுள்ளனர். கினியா, சியாரா லியோன், லைபீரியா பகுதிகளில் இந்த நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ளது.

நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நோய் கட்டுப்பாட்டு நிபுணர்களை கொண்ட ஆலோசனைக் கூட்டம் விரைவில் ஜெனிவாவில் நடை பெறவுள்ளது. இதில் முக்கி மான நடவடிக்கைகள் மேற் கொள ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 900 தீவிரவாதிகள் படுகொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள, பழங்குடியின மக்கள் வசிக்கும், வஜிரிஸ்தான் மலை பிரதேசங்களில் பதுங்கியிருந்த தலிபான் மற்றும் பிற பயங்கரவாதிகள் மீது அந்நாட்டு இராணுவம், கடந்த ஜூனில் தொடகிய வேட்டையில், இதுவரை, 900 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என, அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

முதற் முறையாக இந்தத் தகவலகளை வெளியிட்டுள்ள பாகிஸ்தான் இராணுவம், இந்தத் தாக்குதலில், இராணுவ வீரர்கள், 82 பேர் இறந்துள்ளதாக தெரிவிதுள்ளது. "ஆபரேஷன் ஜார்ப் இ அசப் என பெயரிடப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் தாக்குதலில், பயங்கரவாதிகளின், 27 வெடிகுண்டு தயாரிப்பு தொழிற்சாலைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும் ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் கைப பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் கனமழை பேருந்து கவிழ்ந்து 35பேர் பலி



ஜம்மு காஷ்மீர் மாநிலம் கஜோரி அருகே ஓடையில் பேருந்து கவிழ்ந்து 35 பேர் உயிரிழந்தனர். திருமண கோஷ்டியை ஏற்றி சென்ற அந்த பேருந்து பலத்த மழையால், சறுக்கி சாலையை விட்டு விலகி ஓடையில் தலை கீழாக கவிழ்ந்தது. இப் பேருந்தில் பயணம் செய்த 35 பேரும் ஓடை நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கக் கூடும என அஞ்சப்படுகிறது. வெள்ளத்தில் சிக்கிக்கொண்டவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இது வரை 6பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ரியாசி மாவட்டத்தில் நிலச்சரிவு காரணமாக 3 குழந்தைகள் உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்தனர். 23 கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ராகுல் காந்தி தலைமையில் புத்துயிர் பெறும் காங்கிரஸ்

காங்கிரஸ், ராகுல் தலைமையில ஒற்றுமையுடன் செயற்பட்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என கட்சியின் செய்தி தொடர்பாளர் ஷோபா உசா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தலில் ராகுல் தலைமையில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தது. மேலும் 60 ஆண்டு கால அரசியல் வாழ்வில் எப்போதும்இல்லாத வகையில் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற முடியாமல் பலமிழந்தது. இதனையடுத்து கட்சியில் பல்வேறு பொறுப்புகளில் அங்கம் வகித்து வரும் மூத்த தலைவர்கள் பகிரங்கமாக ராகுலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்ததுடன் கட்சி பொறுப்புக்களில் இருந்து விலகவேண்டும் எனவும் வற்புறுத்தி வந்தனர்..

இந்நிலையில் இப்பிரச்சினைக்கு முடிவு கட்டும் விதமாக ராகுல் தலைமையில் தான் கட்சி செயற்படும் எனவும், இதில் யாருக்குமஎவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது எனவும், அவரின் தலைமையின்படியே கட்சி முன்னெடுத்து செயற்படும். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர் காங்கிரஸ் கட்சியினர் தாங்களாகவே மேடைகளில் தெரிவித்து வரும் கருத்துக்கள் குறித்து அவர்களிடம் விளக்கம் கோரப்படும் எனவும் ஷோபா உஷா தெரிவித்துள்ளார்.

# வாழ்வியல் நம்பிக்கையை ஏற்படுத்த அமெரிக்கா தொடர்ந்து உதவும்

## யாழ்ப்பாணத்தில் அமெரிக்க அதிகாரி தெரிவிப்பு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பட செய்வதன் மூலம் அவர்களது எதிர்கால நம்பிக்கையினை ஊட்டுவதற்கான வேலைத்திட்டங்களையே நாம் மேற்கொண்டு வருகின்றோம். எமது உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தலைவர் அன்ரூ மான் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் சமூக செயற்பாட்டு மையத்தினால் யாழ்மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் பல உதவித்திட்டங்கள்,கடற்றொழிலாளர்களிடம் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான எனது இரண்டாவது நியமனம். கடந்த 1997 ஆம் ஆண்டு காலப்பகுதில் இருந்து 2001ஆம் ஆண்டு காலப பகுதிக்குள் பல தடவை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன்.

எனினும் எனது கடந்த கால விஜயங்களில் ஒப்பிடும் போது யாழ்.மாவட்டத்தில் தற்போது பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் நான் பெருமையுடன் கூறிக்கொள்வது என்னவெனில் மக்களின் நலனில் அமெரிக்க ஆதரவு மட்டும் இன்னும் மாற்றமடையவில்லை.

உள்ளூர் வர்த்தகத்தை மேம்படுத்தும் பொருட்டு யாழ். சமூக மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து மீன் ஏல விற்பனை நிலையம், பொதுநோக்கு மண்டபம் என்பன திறக்கப்பட்டு கடற்றொழிலாளர்களது குடும்பங்களிடம் கையளித்துள்ளோம்.

யுத்தத்தின் போது இப்பகுதி முழுமையாக அழிவுக்கு உள்ளானதோடு சமூகத்தவர்கள் தமது கடற்றொழில் உபகரணங்கள் அனைத்தையும் இழந்திருந்தனர்.

எனவே மக்களது வாழ்க்கையினை மீள்கட்டி எழுப்புவதன் மூலம் மீன்பிடித்துறையை மேம்படுத்த இருக்கின்றோம். அதற்கு வடக்கு மாகாண சபை, சமூக செயற்பாட்டு மையமும் எம்முடன் இணைந்து செயற்படுகின்றன. இத்திட்டங்கள் ஊடாக 800 குடும்பங்கள் பயன்பெறவுள்ளமை எமக்கு மகிழ்ச்சியை தருகின்றன.

மேலும் மாதகலில் 60 குடும்பங்களுக்கு என படகு, வலை, உயிர்காப்பு அங்கிகளும் இன்று வழங்கியுள்ளோம். இது அமெ



ரிக்க அரசின் சாதாரண அன்பளிப்பு மட்டும் அல்ல 19 மில்லியன் ரூபாவினையும் செலவீடு செய்துள்ளோம்.

அத்துடன் குறித்த படகு ஒன்று இருவர் தொழிலை மேற்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. 6இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உகரணங்களை பயன்படுத்துபவர்கள் தமது கடற்றொழில் சங்கத்திற்கு மொத்த தொகையில் இருந்து 50 வீதத்தினை செலுத்த வேண்டும்.

இவ்வாறு செலுத்துவதால் மேலும் உள்ள கடற்றொழிலாளர்களுக்கும் குறித்த பொருட்களைப் பெற்றுக் கொடுக்க வசதியாக இருக்கும். இவ்வாறு வாழ்வாதாரத்திட்டங்கள் மேம்படுத்தப்படுவதால் யுத்த பாதிப்பில் இருந்து மீளெழுச்சி பெறுவதன் மூலம் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் நாம் அவர்களுக்கு ஊட்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிகள் விண்ணப்பிப்பதற்கு இப்போது வாய்ப்பு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பொறியியல் பட்டக்கற்கைநெறிக்கான (Bachelor of Technology) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் கணிதப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி (க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்பவியலின் அத்திவார மட்ட பாடங்களில் சித்தி அல்லது வேறு ஏதாவது சமனான அல்லது NDT. NDES. HNDE போன்ற உயர்தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் மென்பொருள் எந்திரவியல் இளமாணிப்பட்டக்கற்கை நெறிக்கான (Bachelor of Software Engineering) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி, நுழைவுத்தேர்விலும் தேர்ச்சி அடைதல் வேண்டும். அத்துடன் ஏதாவது மூன்றாம் தர உயர்தகமைகளைக் கொண்டிருப்பவர்கள் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். மேற்படி இரு கற்கை நெறிகளுக்குமான விண்ணப்பப் படிவங்களை 02.09.2014 முதல் 20.09.2014 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமென யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# மின்சாரக்கட்டணம், தொலைபேசிக்கட்டணம் வீடு வீடாகச் சென்று அறவீடுசெய்யத்திட்டம்

## அறிமுகம் செய்கிறது யாழ். தபாலகம்

(யாழ்ப்பாணம்)

தபால்காரரே கைத்தொலைபேசிக்கு பணம் மீள்நிரப் பும் புதிய திட்டம் ஒன்று அடுத்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வட மாகாண பிரதம தபால் அதிபர் என்.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். பிரதம தபாலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரெலிக்கொம் நிறுவனத்தின் மொபிட்டெல் கைத்தொலைபேசிக்கான பண மீள்நிரப்பும் சேவையை இனிமேல் தபால் விநியோகிப்போரே மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்று வருகின்றது.

இதனால் வீட்டு வாசலுக்கே மீள் நிரப்பும் சேவை வருகின்றது அது மட்டுமல்லாமல் மின்கட்டணம் செலுத்தும் பணியையும், தொலைபேசி கட்டணம் செலுத்தும் பணியையும் இனி இவர்களே உங்களுக்கு மேற்கொள்வார்கள். இவர்கள் மூலமாக உங்களது இவ்வாறான அலுவலக பணிகளை மேற்கொள்ளலாம். வெளியில் செல்ல முடியாதவர்கள் இதனால் பெரும் பயன்பெறக்கூடியதாகவும் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### வடக்கில்...

அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வது அவசியம்.

இலங்கை அரசியல் யாப்புக்கு அமைய உயர்பதவி வகிக்கும் அரச அதிகாரிகள் வெளிநாடு செல்லும்போது அரசிடம் முன்அனுமதி பெற்றுக்கொள்வது அவசியமாகும். மாகாண அமைச்சரொருவர் வெளிநாடு செல்லும்போது அவர் முதலமைச்சருக்கு அறிவிக்க வேண்டும்.

அதேபோலவே மாகாண முதலமைச்சர் வெளிநாடு செல்லும்போது அதற்கான அறிவித்தலை மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வடமாகாண முதலமைச்சர் இவ்வாறான வேண்டுகோளொன்றை சமர்ப்பித்தால் எடுக்கப்படவுள்ள தீர்மானம் குறித்து கேட்டபோது அதனை தற்போது கூறமுடியாது என்று பதிலளித்த அமைச்சர், அதற்கான வேண்டுகோள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதுகுறித்து ஆராய்ந்து தகுந்த தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியமை சம்பந்தமாக இலங்கை அரசுக்கு எந்தவிதமான சிக்கலும் இல்லை என்று கூறிய அமைச்சர்,இந்தியப் பிரதமரின் நிலைப்பாடு தொடர்பாக அரசாங்கம் தெளிவாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக கேட்ட போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்க முடியுமென்று கூறிய அமைச்சர் ரம்புக்வெல்ல அதற்கு முன் 13ஆவது அரசியல் திருத் தசட சட்டம் தொடர்பாக நாடாளுமன்றத் தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக்குழுவில் மாத்திரமே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்த முடியுமென்றும் தெரிவித்தார்.

### வீட்டில்...

கொள்ளையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர் நேற்றுக் காலை செய்த முறைப்பாட்டின் பிரகாரம், மோப்ப நாயுடன் சென்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### தலைமைத்துவ..

23ஆயிரத்து 500 மாணவர்கள் பங்கேற்கும் இந்தப் பயிற்சிநெறியில் முதற்கட்டமாக 7500 பேரும் இரண்டாவது, மூன்றாவது கட்டமாக 8000 பேரும் பங்குபற்றவுள்ளனர்.

மூன்றுவாரங்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் அரசாங்கம், மாணவர்களுக்கான கைபேசி மற்றும் இரண்டு புத்தகங்கள், இரண்டு ரீசேர்ட்ஸ் இரண்டு ஜீன்ஸ் என்பனவற்றை வழங்கவுள்ளது.

இந்தப்பயிற்சி நெறியில் பங்குபற்றும் மாணவர்களில் எவராவது இருதய, சிறுநீரக நோய் உள்ளவர்கள், மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்போர் அதற்கான சரியான காரணத்தை தெரிவிக்கவேண்டும். இவ்வாறானவர்கள் கேட்டுக்கொண்டால் மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.

இவ்வாறான பயிற்சிநெறிகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிறந்த பயனுள்ளதாக அமைவதுடன் அவர்களை இந்த நாட்டின் சிறந்த பிரஜைகளாகவும் ஆக்கமுடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### எமது...

ளிலே கடல்வளம் மிக மேம்பட்டதாக இருந்தது. இந்த இழுவைப்படகுகளின் பாவனையால் அவை எல்லாம் இழுத்து அழிக்கப்பட்ட நிலையில் அங்கு வெறும் தரை மட்டுமே இன்று எஞ்சியிருக்கின்றது. இந்த நிலையில்தான் அவர்கள் இங்கு வந்து எமது கடல் பிரதேசத்தையும் சூறையாடத் துணிந்துள்ளார்கள் இதற்கு ஒரு தீர்வைக் காண வேண்டும் என்ற நோக்கில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இந்தியாவிலே இருந்து வந்த பிரதி செயலாளர் ஒருவருடன் இது தொடர்பாக பேசினேன். அப்பொழுது அவர் என்னிடம் கேட்டார் உங்களைப பொறுத்தவரையிலே இதை எவ்வாறு தீர்த்து வைக்க முடியும் என்று. அதற்குநான் கூறினேன் உங்களுடைய இழுவைப்படகுகள் இங்கு வருவதால்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது அவை எல்லாம் பாரிய இழுவைப்படகுகள் பல இலட்சம் ரூபா செலவில் தயாரிக்கப்படும் படகுகள் எனவே அப்படகுகளை இந்தப்பகுதிகளில் பாவிக்காது அரேபியன் கடலிலும் வங்காள விரிகுடா கடலிலும் கொண்டு சென்று பாவிப்பது பொருத்த முடையது என்றும் பாரம்பரியமாக எங்களுடைய மீனவர்கள் செய்து வந்த தொழிலை தொடர்ந்து செய்வதற்கு நீங்கள் இடமளிக் வேண்டும் என்றும் கூறினேன்.

அத்தோடு இந்திய அரசாங்கம் அந்தப்படகுகளை இப்பகுதிகளில் பாவிக்கக்கூடாது என்ற ஒரு சட்டத்தை கொண்டு வந்தால் இந்திய மீனவர்கள் சேது[illegible]க்கு தெற்கில் இருப்பவர்கள் அரே[illegible] கடலுக்கும் வடக்கில் இருப்பவர்கள் வங்காள விரிகுடாவுக்கும் செல்லக்கூடியதாக இருக்கும் அதைத்தொடர்ந்து சிறு வள்ளங்களைக் கொண்டு பாரம்பரியமாக தொழில் புரிபவர்கள் தமது தொழிலை இலகுவாக பாரம்பரிய முறையில் செய்துவரலாம் என்று சுட்டிக்காட்டினேன் அதை அவர் கவனத்தில் எடுப்பதாக கூறினார்.

ஆனால் எந்த அளவுக்கு அது நடைமுறைப் படுத்தப்படும் என்பது எமக்குத் தெரியாது.

ஆனால் நான் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடமராட்சியில் ஒரு கூட்டத்தை நடத்தி பதினைந்து அலுவலர்களைக் கொண்ட குழுவை நியமித்து அவர்களூடாக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து ஒரு அறிக்கையைப் பெற தீர்மானித்திருக்கின்றேன். அந்த அறிக்கையைக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாம் எடுக்கவிருக்கின்றோம். அதற்கு தம்பி சந்திரகுமார் அவர்களும் அவர்களோடு சம்பந்தப்பட்ட அரசாங்கமும் எமக்கு நிச்சயமாக உதவுவார்கள் என நான் நம்புகின்றேன் என குறிப்பிட்ட முதலமைச்சர்.

பல வருடகாலமாக பலவிதமான கஸ்ரங்களுக்கு முகம் கொடுத்து வந்த எமது மக்கள் இப்போது அதிலிருந்து விடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மேலும் மேலும் வெளிநாட்டு மக்களின் உதவிகளுடனும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகளுடனும் எமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். இந்தச்சந்தர்ப்பத்தில் எமது இளைஞர், யுவதிகள் கல்வி தொடர்பான செயற்பாடுகளில் அதிக சிரத்தை காட்ட வேண்டும். அதிலும் தொழில் கல்வி மிக முக்கியமானது இப்போது மீன்பிடித்துறையில் பலவிதமான நவீன யுத்திகள் வெளிநாடுகளில் கையாளப்படுகின்றன. அவற்றை நாமும் கற்று எமது வாழ்வை மேம்படுத்துவதற்கு முன்வர வேண்டும் அதற்குரிய நடவடிக்கைகளை நாம் வட மாகாண சபை என்றவகையில் முன்னெடுக்க விருக்கின்றோம். எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### கைதடியில்...

கேரதீவு வீதி நாவற்குழியிலுள்ள தமது வீட்டிலிருந்து வேலை செய்யும் கைதடி தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு குறித்த இளைஞர் வந்த வேளையிலேயே இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது டன் லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

### ஐ.நா...

எனவே சர்வதேச விசாரணைக் குழுவுக்கு இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்க மாட்டோம் ஏன்று அரசாங்கம் கூறியுள்ள கருத்தை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியா தென்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணைக்கு முகம கொடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டி வருவது ஏன் என்று கேள்வி எழுப்பிய பொன்சேகா, குற்றச் செயல்களில் ஈடுபட்டோர் மாத்திரமே இவ்வாறு தயக்கம் காட்டுவதாக தெரிவித்தார்.

சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் தான் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

# இலங்கையிலிலுள்ள சாதாரணமக்களுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள்

## ஐ.நா.அபிவிருத்தித்திட்ட பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமூகத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல் திருத்தச் சட்டங்கள் குறித்து கவலை கொள்வதில்லையென ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைப்பணிப்பாளர் சுனினாய் நெண்டி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்தை விடவும் சாதாரண பொதுமக்களுக்கு வேறும் அடிப்படை பிரச்சினைகள் காணப்படுகின்றன.

வரப்பிரசாதங்களைப் பெற்ற சமூகமொன்று 13ஆம் திருத்தச் சட்டம், 17ஆவது திருத்தச் சட்டம் மற்றும் 18ஆம் திருத்தச் சட்டம் போன்றன பற்றி விவாதம் செய்து வருவதாகக் குறிப்பிட் டுள்ளார்.

எனினும், சமூகத்தினால் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த விடயங்கள் பற்றி கவலை கொள்வதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாலியல் ரீதியாக கொடுமைகளை அனுபவித்த பெண்கள், பிள்ளைகள் காணாமற் போன தாய்மார் போன்றவர்கள் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் அதிகரிசனை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார.

காணாமற் போனவர்களுக்கு என்னவாயிற்று என்பது பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்வதில் இவர்கள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மிதிவெடியை மிதிக்காது தமது பிள்ளைகள் பாடசாலை சென்று திரும்ப வேண்டுமென்றே அதிகளவு தாய்மார் விரும்புகின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# பாலதம்புவுக்கு அஞ்சலி



மூத்த தொழிற்சங்கவாதியும் சட்டத்தரணியுமான அமரர் பாலதம்புவின் பூதவுடலுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மலர் வளையம் சாத்தி இறுதிஅஞ்சலி செலுத்தினார்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித்தலைவர் தவராசா உடனிருந்தார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளையதினம் கொழும்பில் நடைபெறவுள்ளன.

# நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிப்பு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## சரத் என் சில்வா அழைப்பு

(கொழும்பு)

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப் பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தான் எந்த விதத்திலும் அரசியலுக்கு வரப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள அவர், எதிர்கால அரசாங்கம் ஒன்றில் எந்தப் பதவியையும் வகிக்கப் போவதில்லை எனவும் ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க சட்ட ரீதியான உதவியைப் பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் கூறியுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் போது அரச நிறுவனங்களுக்கு இடையிலான அதிகாரங்களில் சமநிலையற்ற



அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் அதிகாரங்களில் ஏனைய நிறுவனங்கள் தலையிடாத வகையில் அது உருவாக்கப்பட வேண்டும். அதுவே 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கும் குறைபாடு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வீதி விபத்தில் ஒருவர் காயம்

புன்னாலைக் கட்டுவனில் ஆட்டோ ஒன்று வேகக் கட்டுப் பாட்டை இழந்து குடைசாய்ந்ததில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புன்னாலைக் கட்டுவன் நாச்சிமார் கோவிலடியில் நேற்றுக் காலை 8 மணிக்கு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சீ.சிவலிங்கம் (வயது-62) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகமாக வந்த ஆட்டோவிற்கு குறுக்காக நாய் ஒன்று பாய்ந்தமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# அமெரிக்க தூதரக அதிகாரி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க தூதரகத்தின் பிரதி பிரதம செயற்றிட்ட பொறுப்பாளர் அன்ரூமன் இன்று வடமாகாண சபை உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார்.

இன்று காலை 10.15 மணியளவில் இச் சந்திப்பு கைதடியிலுள்ள வடமாகாண சபை கட்டடத் தொகுதியில் இடம்பெறும் என குறிப்பிட்ட சில மாகாண சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

# தற்கொலை செய்வோரில் இலங்கைக்கு நான்காமிடம்

172 நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனம அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகிக்கின்றது.

இதன்படி உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் கயானா முதலாம் இடத்தை வகிக்கின்றது.

கயனாவில் 100,000 பேரில் 44.2 பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிக்கின்றன. வடகொரியாவில் ஒரு இலட்சம் பேரில் 38.5 பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும் ஒரு இலட்சம் பேரில் 28.9 வீதம் பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஒரு இலட்சம் பேரில் 28.8 வீதம் பேர் தற்கொலை செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. உலகின் மிக முக்கியமான சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக தற்கொலைகள் மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நஞ்சு அருந்துதல், தூக்கிடுதல் மற்றும் துப்பாக்கிச் சூடு போன்ற வழிகளின் மூலம் அதிகளவில் தற்கொலைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிகளவில் தற்கொலை செய்து கொள்வோர் ஆண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முன்னேஸ்வரம் மிருகபலி பூசை அனுமதி வழங்குவதற்கு எதிர்ப்பு

முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் நடத்தப்படும் மிருகபலி பூசைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என சிலாபம் பிரதேச சபையிடம் தேசிய சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது தேசிய சங்க சம்மேளனத்தின் புத்தளம் மாவட்ட உறுப்பினர் பாண்டிருப்பு வினீத திஸ்ஸ தேரர, இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

சிலாபம், முன்னேஸ்வரம் காளி கோயிலில் வருடந்தோறும் நடத்தப்படும் மிருக பலி பூசையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று, தேசிய சங்க சம்மேளனம் உட்பட 16 அமைப்புக்கள், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணையை மேற்கொண்ட நீதிமன்றம், மிருக பலி பூசை நடத்த வேண்டுமாயின், அதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என கடந்த 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக, முன்னேஸ்வரம் காளி கோயில் நிர்வாகத்தினரால், உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு தொடர்பில் அவதானம் செலுத்திய நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தது.

இதற்கமைய, முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருக பலி பூசை நடத்த வேண்டுமாயின், அதற்கு சிலாபம் பிரதேச சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்பதே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாகும்.

முன்னேஸ்வரம் காளி கோயிலின் வருடாந்த மிருக பலி பூசை, எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# 23 இலங்கை மீனவர்களை விடுவித்தது இந்தியா

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 23 பேர் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.இந்த மீனவர்களின் 4 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் லால் டி சில்வா தெரிவித்தார்.

இந்திய கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் இலங்கை கடற்படையினரிடம் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

காங்கேசன்துறைக்கு வடக்கேயுள்ள கடற்பரப்பில் நேற்று மாலை 5.45 மணி அளவில் இலங்கை மீனவர்களை பொறுப்பேற்றதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டு கடற்படைப் படகுகள் மூலம் மீனவர்கள் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தேவேந்திரமுனை, வென்னப்புவ, சிலாபம் பகுதிகளில் இருந்து கடலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் சிலரே இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர்.

இந்த மீனவர்கள் தங்களின் சொந்த இடங்களை நோக்கித் திரும்புவதற்குத் தேவையான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

# இலங்கை பெண்ணை ஏமாற்றி இத்தாலியில் கைப்பை பறிப்பு

(கொழும்பு)

இத்தாலியில் இலங்கை பெண்ணை ஏமாற்றி சூதாட்ட நிலையத்திற்கு அழைத்துச் சென்ற இரு இளைஞர்கள் பெண்ணின் கைப்பையை பறித்து சென்றுள்ளனர்.

இத்தாலியின் மொன்சா நகரில வங்கி ஒன்றில் ஏ.டி.எம் இயந்திரத்தில் இலங்கையைச் சேர்ந்த 50 வயதான பெண் பணத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்துள்ளார்.

அப்போது அவர் அருகில் வந்த இரண்டு இளைஞர்கள், தமக்கு அதிஷ்ட லொத்தர் ஒன்றில் பெருந் தொகைப் பணம் பரிசாக கிடைத்துள்ளதாக கூறியுள்ளனர்.

அந்தப் பணத்தை பெற்றுக் கொள்வதற்காக அதிஷ்ட லொத்தர் நிலையம் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டுமாறு இளைஞர்கள் அந்தப் பெண்ணிடம் கேட்டுள்ளனர். அத்துடன் பெண்ணுக்கும் ஒரு தொகை பணத்தை தருவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து இலங்கைப் பெண், அந்த இரண்டு இளைஞர்களையும் அதிஷ்ட லொத்தர் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, இடத்தை காட்டி விட்டு செல்ல முயற்சித்த போது, இளைஞர்கள் பெண்ணின் கைபையை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.